# தமிழரசு

16-2-1977 50காசு



# அரசு—மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

## தமிழரசு

## சந்தா விவரம்

தமிழரசு இதழில் பல பயனுள்ள செய்திகள் வெளியிடப்படுகின்றன. தமிழரசு தமிழ் இதழ் மாதம் இரு முறையும், ஆங்கில இதழ் மாதம் ஒரு முறையும் வெளி வருகின்றன.

சந்தா விவரம் பின்வருமாறு :

| தமிழ் இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 12.00 |
| 6 மாதச் சந்தா .... | 6.00 |

| ஆங்கில இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 6.00 |
| 6 மாதச் சந்தா | — |

சந்தாத் தொகையை மணி யார்டர் அல்லது டிராப்ட் மூலமாக

**Circulation Manager,**
**Tamil Arasu Office,**
**Govt. Estate,**
**Madras—600 002**

என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

[குறிப்பு: சிலர் தவறுதலாக செக் அல்லது டிராப்டில் **General Administrative Manager** என்று குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.]

அட்டைப்பட விளக்கம்

எஃகும், சிமெண்ட்டும் இல்லாமல் கட்டப்பட்டுள்ள மலிவு விலை வீடு.

மலிவு விலை வீடுகளைப் பற்றிய விவரங்களை அறிய "குறைந்த செலவில் வீடுகள் கட்டலாம்!" என்ற கட்டுரையைத் தயவுசெய்து படியுங்கள்

# தமிழரசு


16—2—1977

மலர் : 7 இதழ் : 16


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| சிறந்த இந்தியர் ... | 2 |
| நமது இலட்சியம்! ... | 5 |
| வறட்சியைத் துடைத்திட வகுத்த திட்டங்களும் சாதனைகளும் ... | 8 |
| ஏழை எளியவர்களுக்குப் புதிய திட்டங்கள்! ... | 9 |
| இந்தியாவில் கல்வி வளர்ச்சி! ... | 15 |
| வெற்றிக் கொடி பெற்றவர்களுக்கு வாழ்த்து! ... | 17 |
| தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் தன்னிகரற்ற பணிகள்! ... | 19 |
| படமும் செய்தியும் ... | 24 |
| குறைந்த செலவில் வீடுகள் கட்டலாம்! | 26 |
| தமிழ்நாட்டில் இரத்தினக் கற்கள்!... | 32 |
| இலவச உழைப்பு முகாம்! ... | 33 |
| கால்நடைகளை மேம்படுத்துவதற்கான இனச்சேர்க்கை வழிமுறைகள் ... | 37 |
| கண்கவர் தோல்பொருள் உற்பத்தியில் கணிசமான வெற்றி! ... | 41 |
| உழவர்களுக்கு வேளாண்மைத் துறை அளித்த பொங்கல் பரிசுகள்! ... | 42 |
| இதன் விலை ரூபாய் 5,830 ... | 45 |



கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

# சிறந்த இந்தியர்

திரு பக்ருதின் அலி அகமது 1905-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி தில்லியில் பிறந்தார். அவரது தந்தை மறைந்த கர்னல் இஸட். ஏ. அகமது, அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

### பள்ளிப்படிப்பு

உத்தரப் பிரதேசத்தில் கோண்டா என்னுமிடத்தில் உள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் திரு பக்ருதின் அலி அகமது ஆரம்பக் கல்வி பயின்றார். தில்லியிலுள்ள அரசாங்கப் பள்ளியில் 1921-ல் பஞ்சாப் பல்கலைக் கழக மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினர். தில்லியிலுள்ள புனித ஸ்டீபன் கல்லூரியில் சேர்ந்தார். பிறகு உடனே இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புனித காதரையுன் கல்லூரியில் சேர்ந்து படித்தார். 1927-ல் ''வரலாற்றுப் பயணங்கள்'' படிப்பில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். அவர் சட்டப் படிப்பை முடித்த பிறகு 1928-ல் லண்டனில் வழக்கறிஞரானார்.

### வழக்கறிஞர்

திரு பக்ருதின் அலி அகமது இந்தியாவுக்குத் திரும்பியவுடன், பிரிக்கப்படாத இந்தியாவில் பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். 1928-ல் தனது தந்தையுடன் அவர் அஸ்ஸாமுக்குச் சென்றார். கல்கத்தாவில் சிறிது காலம் வழக்கறிஞர் தொழிலை நடத்தியது தவிர, வாழ்நாளில் பெரும் பகுதியை அவர் அஸ்ஸாமிலேயே கழித்தார்.

1938-39-ல் முதல் காங்கிரஸ் அமைச்சரவையில்(பர்தோலோய் அமைச்சரவை) நிதி, வருவாய்த் துறை அமைச்சரானார். பர்தோலோய் அமைச்சரவையில் அவரது பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தீவிர நடவடிக்கைகள் மறக்க முடியாதவை. 50 சதவிகித நில வருவாய் கழிவு, விவசாய வருமானத்திற்கு வரி விதிப்பு, மற்ற வருவாய்த் துறைகளையும் கண்டறிதல் ஆகியவை இந்தத் தீவிர நடவடிக்கைகளில் அடங்கும். இந்த நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தின் வருவாய் இருமடங்காகப் பெருகியது.

### தனிநபர் சத்தியாக்கிரகம்-சிறைவாசம்

1940-ல் மறைந்த திரு கோபிநாத் பர்தோலோயுடன் அவர் அரசாங்கத்திலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு மகாத்மா காந்தியின் உத்தரவின்படி தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். இதற்காக அவர் ஓராண்டுச் சிறையிலடைக்கப்பட்டார்.

## குடியரசுத் தலைவரின் மறைவுக்கு அனுதாபங்கள்

மிக உயர்ந்த தேசபக்தர்; தேசிய வாதி. இந்தியாவின் தலைசிறந்த புதல்வர்களில் அவர் முதன்மை வகிக்கிறார். தேச விடுதலைப் போரில் அவர் ஏற்றிருந்த பங்கு, குறிப்பிடத்தக்கது.

—பி. டி. ஜட்டி

ஜனதிபதி பக்ருதின் அலி அகமது அவர்களின் மரணம் என்னைத் திடுக்கிடும்படி செய்து விட்டது. என்னுடைய துயரத்தை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை. அவர் ஒரு சிறந்த இந்தியர், ஒரு சிறந்த கனவான், ஒரு சிறந்த முஸ்லீம்.

விவேகமான ஆலோசகரையும் சிறந்த குணம், சேவை, கடமையுணர்வு படைத்தவரையும் நாடு இழந்து விட்டது. அகமது பல விஷயங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். விளையாட்டுகளை வளர்க்கப் பெருமுயற்சி செய்தார். எல்லா விஷயங்களிலும் நியாய உணர்வு கொண்டிருந்தார்.

—பிரதமர் இந்திரா காந்தி

விடுதலை பெற்றவுடன் அவர் மறுபடியும் பாதுகாப்புக் கைதியாகத் தொடர்ந்து மூன்றரை ஆண்டுக்காலம் சிறையிலடைக்கப்பட்டார். 1945 ஏப்ரலில் அவர் விடுதலை செய்யப்பட்டார். 1945 இல் நடைபெற்ற தேர்தலில் மாநில சட்டசபைக்குப் போட்டியிட்டார். ஆனல், முஸ்லீம் லீக் தனது சக்திகள் அனைத்தையும் திரட்டி, முஸ்லீம் லீக் வேட்பாளரிடம் அவர் தோல்வியடையும்படி செய்தது.

1946-ல் அவர் அஸ்ஸாமின் அட்வகேட் ஜெனரலானர்.


1957-ல் இந்தியப் பிரதிநிதியாக அவர் ஐக்கிய நாடுகளுக்குச் சென்றார்.

1957-ல் இவர் மறுபடியும் அஸ்ஸாம் சட்டசபைக்கு மிகப் பெரும் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவர் மாநில அமைச்சரவையில் சேர்ந்தார். நிதி, சட்டம், சமுதாயம் அபிவிருத்தி, பஞ்சாயத்து, உள்ளூர் சுயஆட்சி ஆகிய பொறுப்புக்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

1962-ல் அவர் மறுமுறையாக மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து அமைச்சர் பதவியை வகித்து வந்தார். உள்ளூர், சுயஆட்சி இலாகாவைத் தவிர முன்பு அவர் வகித்து வந்த பொறுப்புகளைத் தொடர்ந்து வகித்து வந்தார். 1964-முதல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், பார்லிமெண்ட் போர்டிலும் அவர் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வந்தார்.

### மத்திய அமைச்சர்

1966-ல் அவர் மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1966 ஜனவரி 29-ந் தேதி அவர் மத்திய அமைச்சரவையில் மின்சாரம், பாசன வசதி அமைச்சராகப் பதவியேற்றார். 1966 நவம்பர் 14-ந் தேதி மத்தியக் கல்வி அமைச்சரானர்.



குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமது

தோற்றம் : 13.5.1905
மறைவு : 11.2.1977

1967-ல் பொதுத் தேர்தலில் அஸ்ஸாம் பார்பேட்டா தொகுதியிலிருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 மார்ச் 13-ந் தேதி தொழில் அபிவிருத்தி, கம்பெனி விவகாரங்கள் காபினெட் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தொழில் அபிவிருத்தி, கம்பெனி விவகாரங்கள் அமைச்சராக பணியாற்றுகையில் வேகமான தொழில் வளர்ச்சி, சிறு தொழில் மற்றும் துணைத்தொழில் களுக்கான பரந்த அடிப்படை, பின்தங்கிய பகுதிகளுக்கு விசேஷ கவனம், தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய தொழில் கொள்கையை திரு அகமது வகுத்தளித்தார். ''ஏகபோக ஒழிப்பு மசோதாவை'' முன்மொழிந்து வழிநடத்தினர். 'புதிய கண்டுபிடிப்புடன்' மசோதாவை அவர் அறிமுகப் படுத்தினர்.

> இந்தியக் குடியரசின் துணைத் தலைவரான திரு. பி. டி. ஜட்டி அவர்கள், 11-2-77 அன்று இந்தியக் குடியரசின் தாற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பொறுப் பேற்றுள்ளார்.

1970 ஜூன் 27-ந் தேதி திரு அகமது விவசாய அமைச்சராகப் பதவியேற்ருர். 1971 பொதுத் தேர்தலில் அஸ்ஸாமில் அவரது பழைய தொகுதியிலிருந்து அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் பட்டபோது முன்பு அவர் பார்த்து வந்த பழைய இலாகாப் பொறுப்புகளே அவருக்கு அளிக்கப்பட்டன.

### முதிர்ந்த உறுப்பினர்

அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டியில் திரு. அகமது மிகவும் முதிர்ந்த உறுப்பினராக (சீனியர் மெம்பர்) இருந்தார். அந்தத் தகுதியின் அடிப்படையில் அவர் அனைத்து அரசியல் முடிவுகளிலும் ஒத்துழைத்து வந்தார்.

### விளையாட்டு வீரர்

திரு. பக்ருதின் அலி அகமது ஒரு ஆர்வமுள்ள விளையாட்டு வீரர். அஸ்ஸாம் கால்பந்து சங்கம், அஸ்ஸாம் கிரிக்கெட் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் அஸ்ஸாம் விளையாட்டுக் கவுன்சிலின் துணைத் தலைவராகவும் அவர் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். அஸ்ஸாம் மாநிலத்தின் பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். அனைத்திந்திய டென்னிஸ் சங்கத்தின் தலைவராக அவர் மறுபடியும் சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

## நாம் சிந்திக்க வேண்டியது என்ன?

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் இயங்கி வந்த இந்த உலகம் தற்போது அச்சுறுத்தப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் தாம் எதைப் பெறலாம் என்ற கேள்வியை எழுப்புகிருர்கள். இந்த வழக்கம் நம் நாட்டிலும் உள்ளதைப் பார்க்கிரோம். ''அரசிடமிருந்து நாம் எதைப் பெறமுடியும்? ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை நமக்குச் சாதகமாக்கிக்கொள்வது எப்படி? நாடு நமக்காக என்ன செய்கிறது?'' என்ற கேள்விகளுக்குப்பதிலாக நாட்டிற்கு நாம் என்ன செய்ய முடியும் என்பது பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. திறமை, சேவை, அறிவுத் திறன் ஆகிய வடிவங்களில் நமது சமுதாயத் திற்குத் தொண்டாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

—இந்திரா காந்தி.

### இந்திய ஜனதிபதி

இந்தியாவின் ஐந்தாவது ஜனதிபதியாக திரு பக்ருதின் அலி அகமது 1974 ஆகஸ்டு 20-ந் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெற்ற வாக்குகளின் மதிப்பு 7,65,587. அவர் ஆகஸ்டு 24-ந் தேதி ஜனதிபதியாகப் பதவி ஏற்ருர்.

இந்திய ஜனதிபதியாக அவர் ஹங்கேரி, யூகோஸ்லாவியா, இந்தோனேஷியா, எகிப்து, ஈரான், ஐக்கிய எமிரேட்டிஸ் ஆகியவை உட்பட ஏராளமான நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். அவர் சென்ற நாடுகளுக்கும் நமது நாட்டிற்குமிடையே நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் உருவாக்கும் ஒரு கருவியாக அவர் பணியாற்றினர்.

மலேசியா, பிலிப்பைன்ஸ், பர்மா ஆகியநாடுகளில் நல்லெண்ணச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் பொருட்டு 1977 பிப்ரவரி 6-ந் தேதி அவர் தமது பயணத்தைத் துவக்கினர். ஆனல் அவர் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக தனது சுற்றுப் பயணத்தின் பிந்திய பகுதியை ரத்து செய்து விட்டு பிப்ரவரி 10 ஆம் தேதியன்று புதுதில்லி திரும்பினர்.

11-ஆம் தேதியன்று எதிர்பாராது மாரடைப்பினல் மரணம் எய்தினர். 13-ஆம் தேதியன்று டெல்லியில் உள்ள ஜும்மா மசூதியில் நல்லடக்கம் செய்யப் பெற்ருர்.

நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மறுமலர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் மிக முக்கியமான காலத்தில் திரு அகமது நாட்டின் ஜனதிபதியாக விளங்கினர்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் அவர் நாட்டுக்கு ஆற்றிய பணி—நாடு விடுதலை பெற்றது முதல் ஒரு உண்மையான, வேகமான, தன்னையே அர்ப்பணிக்கும் பொது ஊழியராக அவர் ஆற்றிய பணி, ஆகியவை என்றும் அழியாமல் நினைவிலிருக்கும்.

# நமது இலட்சியம்!

"நம்முடைய நாட்டு மக்களின் பொருளாதார, சமூக வாழ்வின் முக்கியத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது 20 அம்சத் திட்டம். அதனால் மக்கள் மத்தியில், இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. ஆகவே இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இத்திட்டத்தை அமல் நடத்துவதில் முழு முயற்சிகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

''விலைவாசி உயர்வு சில இடங்களில் ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே. அதிக அக்கறை செலுத்த வேண்டிய விஷயம் இது. 1973-74-ல் இருந்ததைவிட இந்த நிலைமை மிகவும் மாறுபட்டதாகும் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்குப் பெரும்பான்மை பொருட்களின் உற்பத்தியும், அவை கிடைப்பதும் மிகவும் சிறப்பாக உள்ளன. சில பொருட்களில் ஓரளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தத் தட்டுப்பாடு ஹேஷ்யபேரச் சக்திகளால் ஏற்பட்டது. சில நேரங்களில் மழை பெய்வதில் ஏற்படும் காலதாமதம், விலைவாசி உயர்வுக்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆனால் இந்தக் தட்டுப்பாடு நிலையை முறியடிக்க உணவு இருப்பைப் பயன்படுத்தி வருவதுடன், இறக்குமதியைத் தாராளமாக்க அந்நியச் செலாவணி வளங்களையும் பயன்படுத்தி வருகிறோம். இந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

''சமையல் எண்ணெய் சம்பந்தமாக ஒரு முக்கிய கொள்கைக்கு முடிவு எடுத்திருப்பதைப் பத்திரிகையின் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த 20 ஆண்டுக் காலமாக அந்நியச் செலாவணிப் பற்றுக்குறையால் இடர்ப்பட்டு வந்த இறக்குமதிக் கொள்கை முழுதுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுக் காலமாகக் கள்ளக்கடத்தலைத் தடுக்கவும், ஏற்றுமதியை மேம்படுத்தவும் நாம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாய் நாம் பெற்ற அந்நியச் செலாவணியைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த இறக்குமதிக் கொள்கையில் மாற்றம் காணப்பட்டுள்ளது.



### தேசியக் கொள்கை

''தேச நலன்களுக்கு எதிராக, குறுகிய இலாபம் பெறும் பல்வேறு பிரிவினரின் போக்கைத் தொடர்ந்து எல்லா வகையிலும் பல்வேறு இன்னல்கள்நேர்ந்திருந்ததை 1974-ஆம் ஆண்டு நாம் உணர்ந்தோம். பற்றுக்குறை பற்றிய சிறு அறிகுறி காணப்பட்டதும் சில மாநில அரசுகள் பீதியுடன் செயல்படத் துவங்கின. ஹேஷ்ய பேரத்திற்கு எதிரான நடவடிக்கையில் இறங்காமல், உணவுப் பொருட்கள் நடமாட்டத்தில் முறையாகவோ, முறையில்லாமலோ சில கட்டுப்பாடுகளை விதிக்கும் நடவடிக்கைகளில் இறங்கின. இது வருத்தம் தருகிற ஒரு விஷயமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து தேசிய சந்தை மாற்றம் கண்டதும், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான தேசியக் கொள்கைகளை தொடர்வது இயலாமல் போயிற்று. இந்த விஷயங்களில் தேசியக்கொள்கையை ஒவ்வொரு மாநிலமும் பின்பற்ற வேண்டும். அதன் மூலமே விலைவாசி உயரும் போக்கை நாம் மாற்றியமைக்க முடியும்.

### நிலச்சீர்திருத்தம்

"இப்போது எல்லா விஷயங்களையும் குறிப்பிட நான் விரும்பவில்லை. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இன்னும் குறிப்பிடத்தக்கஅளவு நிறைவேற்றப்பட வேண்டும். இலக்கைப் பூர்த்தி செய்யும் காலவரையறை நீடிக்கப்பட்டு வருகிறது. இதற்கான காரணங்களை நாம் விரிவாகப் பரிசீலனை செய்வதுடன் அதற்கான நிவாரணப் பணிகளையும் முடிவு செய்ய வேண்டும். முதல் நடவடிக்கை நில விநி

# பிரதமர் உரை

யோகம் என்றாலும், சிறு விவசாயிகள் அந்த நிலத்தைக் கொண்டு என்ன செய்கிறார்கள் என்பதும் அதேபோல முக்கியமானது. அந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்படாவிட்டால் அந்த நிலத்தைத் திரும்ப ஒப்படைக்கும் போக்கே அவர்களிடம் ஏற்படும். காரணம் அவர்களிடம் நிலத்தைப் பயன்படுத்துவதற்கு சக்தியோ, வசதியோ இல்லாததேயாகும்.

‘‘தண்ணீருக்கோ, மின்சார வசதிக்கோ வசதி ஏற்படுத்தித் தருவதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகச் சில மாநிலங்களிலிருந்து எனக்குத் தகவல் வந்தது. சம்பந்தப்பட்ட முதல் அமைச்சர்கள் இது சம்பந்தமாகப் பரிசீலித்து இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். காரணம், நுகர்வோருக்கு இது நியாயமானதல்ல.

‘‘சில தெற்கு மாநிலங்களில், அரிசி சிறிது சேதம் அடைந்திருந்தாலும் உட்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனால் உணவுக் கார்ப்பொரேஷன் அந்த அரிசியை வாங்குவதில்லை. ஆகவே தனியார் ஏஜென்சிகள் அவற்றைக்குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்பதாக மத்திய உணவு விவசாய அமைச்சகத்திடம் நாம் பேசியுள்ளோம். இதற்கு இப்பொழுது ஒரு வழி காணப்பட வேண்டும். உணவுக் கார்ப்பொரேஷன் இந்த அரிசியை வாங்க அனுமதிக்கப்பட்டால் எதிர்காலத்தில் ஒரு தரத்தைப் பராமரிக்க அதனால் முடியாது என்று என்னிடம் கூறப்பட்டது. கஷ்டமான காலத்தில் தற்காலிகமாக நாம் ஓரளவு செய்ய இயலும். மக்களில் மிகவும் ஏழ்மையானவர்கள் பாதிக்கப்படாத வகையில்-இந்தப் பிரிவினர் அரிசி வாங்கிச் சாப்பிடுபவராக இருப்பதால் அவர்களுக்கென ஒரு மாற்று ஏற்பாடு காணப்படவேண்டும்.

**கிராமக் கடன்**

‘‘கடன் வழங்குவதற்கு இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளால் ஓரளவு விளைவுகளே ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகும். அளவில் வளர்ச்சியடைந்து வருவதாகவும் தெரிகிறது. கிராம பாங்குகள், கடன் உதவிச் சங்கங்கள், விவசாயிகள்சேவைக்கழகங்கள் ஆகிய இவையனைத்தும் வலுப்படுத்தப்படவேண்டும். இவைகளின் நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட வேண்டும். இந்த மகத்தான பணிக்குப் பலன் கிடைக்கவும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் குறிப்பாக சிறிய விவசாயிகள் ஆகியோரின் நலன்கள் காக்கப்படவும், இந்தியாவில் ஒரு உச்சக்கட்ட விவசாய அபிவிருத்தி பாங்கு தேவை. இந்தத் தேவை குறித்து மந்திரி சபைக் குழு பரிசீலித்து வருகிறது. பாங்கு அமைப்பது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

‘‘தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் ஜவுளி, சணல், மற்றும் ஓரிரு தொழிற்சாலைகள் இன்னல்களை எதிர்நோக்கின. ஆனால் தொழிற்சாலை உற்பத்தி பொதுவாக உயர்ந்தே வந்துள்ளது. குறிப்பாகஅரசுத்துறைத்தொழிற்சாலைகளில் உயர்வு காணப்பட்டு வந்துள்ளது. உற்பத்தித் திறன் பயன்படுத்துவது நிலையாக உயர்ந்து வந்துள்ளது. பிரமிக்கத்தக்க வகையில் தொழிலாளர்கள் ஒத்துழைத்து வந்துள்ளனர். நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களிப்பது சம்பந்தப்பட்ட நம்முடைய திட்டங்களைப் பின்பற்றுவது, அமல் நடத்துவது ஆகியவற்றுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படவேண்டும்.

‘‘20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் மாணவர்கள்-இளைஞர்கள் சம்பந்தப்பட்டது. அவ்வப்போது மாணவர்களும், இளைஞர்களும் கோஷ்டி கோஷ்டியாக என்னைச் சந்தித்து சம்பந்தப்பட்ட திட்டம் தங்கள் பகுதிகளில் அமல் நடத்தப்படவில்லை என்று என்னிடம் சொல்லி வருகிறார்கள். ஒவ்வொரு மாநில முதல்வரும் இது விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தித் தத்தம் மாநிலத்தில் மாணவர்களின்-இளைஞர்களின் - திட்டத்தில் உள்ள இடைவெளிகள் குறித்து கவனிக்கவேண்டும். மிகவும் உணர்ச்சிகரமான பிரிவினர் இவர்கள். ஆதலால் எத்தகைய கோரிக்கைகளோ குறைகளோ காணப்படுமானால் அவை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

**மக்கள் தொகை**

‘‘இப்போது நம்முடைய முக்கிய திட்டங்களில் தேசிய மக்கள் தொகை ஒன்று என்பதை நீங்கள் அனைவரும் உணர்வீர்கள். திட்டமிட்ட பிரச்சாரங்கள், தவறான பிரச்சாரங்கள் ஆக இப்படிப் பல போக்குகள் ஏற்பட்டு இருந்தாலும் மக்கள் தொகைத் திட்டத்தில் நாம் சிறந்த சாதனை படைத்துள்ளோம். நம்முடைய இலக்கை எட்டிப்பிடிப்பதற்கு எத்தனையோ முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு முதல் முன்னுரிமை அளிக்க நாம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும் எந்த வகையிலும் நிர்ப்பந்தம் கூடாதென்பது தெளிவான ஒன்றாகும். நிர்ப்பந்தத்தின் மூலம் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் மேம்பாடுகாணமுடியாது. மாறாக அதனால் இடையூறே விளையும்.

‘‘தாய்-சேய் நல சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்தவும், விஸ்தரிக்கவும் மாநிலங்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் ஒரு அம்சம் போதுமானதாக வலியுறுத்தப்படவில்லை. குடும்பக்கட்டுப்பாடு மூலம் குறைந்த வருமானம் உள்ள நபர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சிறந்த வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும் உருவாக்க வழி காண முடியும்.

‘‘நான் சொல்ல வேண்டிய ஓரிரு விஷயங்களும் உண்டு. காரியங்கள் ஏன் செய்யப்படவில்லை என்று நாம் எதிர்நோக்கி இருக்கக்கூடாது; ஆனால் விளைவுகளிலேயே கவனமாக இருக்க வேண்டும்’ என்று என் தந்தை ஒரு முறை சொன்னதை இங்கே நான் கூற விரும்புகிறேன். சில நேரங்களில் ஆற்ற வேண்டிய செயல்களை அதிகாரிகள் வசம் ஒப்படைக்கும் போக்கு நமக்கு ஏற்படும். அதனாலேயே நமது திட்டங்கள், ஆற்ற வேண்டிய செயல்கள் தடைப்படும் நிலைமையும் ஏற்படக்கூடும். இந்தத் திட்டங்களை அமல் நடத்துவதில் கவலையில்லாத போக்குடையவராய் அதிகாரிகள் இருக்க அனுமதிக்கப்படக்கூடாது. ஆகவே, நாம் முன்பு சொன்னபடி திட்டங்கள் யாவும் நாம் திட்டமிட்டபடி, நாம் நினைத்தபடி அமல் படுத்தப்படுகின்றனவா, எந்த நோக்கிற்காக மேற்கொள்ளப்பட்டதோ அவை சரிவர நடத்தப்படுகின்றனவா என்பன போன்ற விஷயத்தில் உன்னிப்பாக கண்காணித்து வர வேண்டும்.



### காடு வளர்ப்பு

''மரம் வளர்த்து காடாக்குதல் முக்கியமான திட்டங்களில்ஒன்று. நான் இதைப்பற்றி தொடர்ந்து பேசி வருகிறேன். ஏனென்றால் மரம் நடாமலிருப்பது அல்லது காடுகளை ஒழிப்பது ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்கள், ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டுமின்றி ஒரு வேளை நூறுண்டுக் காலத்துக்கும் கூட இந்த நாட்டைப் பாதிக்கக் கூடும். ஆகவே இது மிகவும் தீவிரமான பிரச்சினை. காடுகள் பல்வேறு காரணங்களுக்குப் பயன் படுகின்றன. அது வெள்ளத்தை தடுக்கிறது. வறட்சியை அதனால் தடுக்க முடியும். உணவும், உடையும் அது அளிக்கிறது. ஆனால், மக்கள் மரங்களை வெட்டாமலிருப்பார்களானால் காடுகள் ஒரு விதத்தில் வேலை வாய்ப்பையும் அளிக்க முடியும். உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இது சம்பந்தமாக ஏராளமான பணி நடந்து வருகிறது. அதற்கே உரித்தான மிகப்பெரிய அளவில் காடுகள் அமைப்புப்பணி நடைபெற்று வருகிறது. மரங்களை வெட்டுவதைச் சிறிது நிறுத்தி வைப்பது பற்றி மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். காடு வளத்தை வலியுறுத்தும் சில மாநிலங்களில் கூட வேகமாக மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன என்று நான் கேள்விப்பட்டேன். ஆகவே, ஒரு வேளை, மரங்களை வெட்டுவதைச் சிறிது காலத்திற்கு நாம் நிறுத்தி வைக்க வேண்டும். இந்த இடைக்காலத்தில் காடுகளை வளர்த்து, பாதுகாத்து அதே நேரத்தில் காடுகளிலிருந்து வருவாய் ஈட்டுவதற்காக ஒரு முறையான திட்டத்தை வகுக்க வேண்டும்.

''சராசரி கிராமப்புற மனிதனுக்குத் தகுந்த தொழில் நுட்பம் மற்றொரு பிரச்சினை. கிராமப்புற மக்களின் திறமையை வளர்ப்பதற்கு இது மிகவும் அவசியம். நகரங்களில்கூட இது பற்றி முயற்சிக்கலாம்.

''அநேக முதலமைச்சர்கள் பெரிய பாசன வசதித்திட்டங்கள் வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். மிகவும் எளிதாகவும், குறைந்த செலவிலும், அமைக்கக்கூடிய—மக்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய சிறு பாசனவசதித் திட்டங்களில் அவர்கள் அக்கறை காட்டவில்லை என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. நான் பெரிய திட்டங்களை எதிர்க்கவில்லை. நமக்குத் தேவைப்படும்போது அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகள் இருக்கின்றன என்ற காரணத்தால் நாம் சிறு பாசன வசதித் திட்டங்களைப் புறக்கணிக்கக் கூடாது. குடிநீர் வசதி அளிப்பதன் அவசியத்தை முன்பு வலியுறுத்தி வந்ததை நாம் மறந்து விட்டது போல் தெரிகிறது. இதற்கான வசதி சரியாகச் செய்யப்படவில்லை என்று பல பகுதிகளிலிருந்து மக்கள் புகார் செய்கிறார்கள்.

''மற்றொரு விஷயத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பெரிய தொழிலோ, சிறிய தொழிலோ எந்தத் தொழிலாக இருந்தாலும் அது சிறு விவசாயியையோ, கைவினைஞரையோ, மீனவரையோ அதுபோன்ற யாருக்கும் அதிருப்தி ஏற்படுத்தாதவாறு, செயல்படுத்தப்பட வேண்டும். இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துகையில் தங்களது ஜீவனத்திற்காக இத்துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர், பயிற்சியளிக்கப்பட்டோ அல்லது பயிற்சி பெறாமலோ இத்தொழில்களில் ஈர்த்துக் கொள்ளப்படும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

''ஆகவே எந்தத் திட்டத்திலும், அத்திட்டம் சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்துமாறு முதலமைச்சர்கள் வலியுறுத்த வேண்டும்.

''வாசகங்கள், வார்த்தைக்கோவைகள், எண்கள் ஆகியவற்றுடன் இணைந்த நமது பழைய மனோதத்துவம் மாற்றப்பட வேண்டும். நாம் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும்தான் நினைக்க வேண்டும். நாம் என்ன செய்தாலும் என்ன பலன்கள் கிடைக்கின்றன, நாம் விஷயங்களை எவ்வளவு அழகாகப் பேசுகிறோம் என்பதோ அல்லது மக்கள் எவ்வளவு உணர்ச்சிகரமாக இருக்கிறார்கள் என்பதோ பெரிதல்ல. நாம் எதற்காகச் செயல்படுகிறோமோ அதை நாம் அடைய வேண்டும்.

*[இருபது அம்சத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துப் பரிசீலிப்பதற்காக 18-1-1977 அன்று கூடிய முதலமைச்சர்களின் மாநாட்டில் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்]*

# வறட்சித் துயர்துடைத்திட வகுத்த திட்டங்களும் சாதனைகளும்!

தமிழ்நாட்டின் 13 மாவட்டங்களைச் சார்ந்த 4,725 கிராமங்களில் உள்ள ஒரு கோடி மக்கள் பலன் பெறும் வகையில், 1976-ஆம் ஆண்டில் வறட்சித் துயர்துடைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

* திட்டத்தின் செலவுத் தொகை: ரூ. 27 கோடி.

* ரூ. 12 கோடி செலவுத் தொகையில், 10,000 சிறிய கிராமங்கள் பலன் பெறும் வகையில் குடிநீர் விநியோகத் திட்டங்கள்.

* ரூ. 15 கோடி செலவுத் தொகையில் ஒரு கோடியே 50 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1976 செப்டம்பர் மாதத்தில், நாள் ஒன்றுக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

## குடிநீர் விநியோகத் திட்டங்கள்

* 6,711 குழாய்க் கிணறுகள் 8 மாதங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமானதாகும்.

* 7,671 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.

* 518 குட்டைகள் (ஊருணிகள்) ஆழப்படுத்தப்பட்டன.

* சுமார் 300 கிராமங்கள் பலன் பெறும் வகையில் ரூ 3 கோடி செலவுத் தொகையில் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உப்புநீர்ப் பகுதிகளில் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* குடிநீர் விநியோகத்திற்கென 31 நகரசபைகளுக்கு ரூ. 71 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்புத் திட்டம்

* வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் 6 பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனப் பணிகளுக்கென ரூ. 3 கோடி.

* 2,992 சிறு பாசனப் பணிகளுக்கென ரூ 8.12 கோடி.

* 1,442 சாலைப்பணிகளுக்கென ரூ. 2.32 கோடி.

* 31,606 எக்டேரில் சம உயர வரப்பு அமைப்பதற்கும், 244 குட்டைகள் (ஊருணிகள்) உருவாக்கவும் ரூ. 1.35 கோடி.

* 6,355 எக்டேரில் காடு வளர்ப்பதற்கு ரூ. 41 இலட்சம்.

## சிறப்புத் திட்டங்கள்

* இராமநாதபுரம் (ராஜபாளையம்) மற்றும் திருநெல்வேலி (சிவகிரி) ஆகிய மாவட்டங்களில் பலத்த காற்றால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்படுத்துவதற்கு ரூ. 35 இலட்சம் செலவில் ஒரு திட்டம்.

* பனைமரக் கள் இறக்குவோர்களுக்கு ரூ. 33 இலட்சம் செலவுத் தொகையில் மறுவாழ்வுத் திட்டம். மற்றும் 4 இலட்சம் பனைமரக் கன்றுகள் நடும் திட்டம்.




# ஏழை எளியவர்களுக்குப் புதிய திட்டங்கள்!



—ஓம் மேத்தா,

மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர்



நமது சுதந்திரப் போராட்டத்தினுல் ஏற்பட்ட பாரம்பரியமான ஒரு கடமை இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளின் வாழ்க்கை நிலையைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டும் என்பது அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள கடமை. ஏனெனில் ஏழை எளியவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய முன்னேற்றத்துக்காகவே நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி, அவர்கள் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினர்.

நம் நாட்டில் ஏழைகள் என்பவர்கள் யார்? அரிசனங்களும் பழங்குடியினரும், பிற்பட்ட வகுப்பினரும் தான்! அரிசனங்களும், பழங்குடியினரும் முறையே மக்கள் தொகையில் 8 கோடியினரும், 3.8 கோடியினரும் ஆவர். இவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 22.5 சதவிகிதத்தினர். இவர்கள் தலைமுறை தலைமுறையாக சொல்லி முடியாத இன்னல்களுக்கு ஆளாகி வந்திருக்கிறார்கள்! இவர்களுடைய ஏழ்மை நிலையை மாற்றவும், சமுதாயத்தில் இவர்களுக்கு உள்ள இழிநிலையைப் போக்கவும், அரசியலில் இவர்களுக்குச் செல்வாக்கு ஏற்படவும் அரசாங்கங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரின் முன்னேற்றத்தை வலியுறுத்துகிறது. அவர்களுக்கு அடிப்படையான பல பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ''நாடாளுமன்றத்திலும், மாநில சட்டசபைகளிலும் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். பீஹார், மத்தியப் பிரதேஷ், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் நலத்துக்காக இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். கோயில்கள் இவர்களுக்குத் திறந்து விடப்பட வேண்டும். பள்ளிக்கூடங்கள் முதலியவற்றில் இவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். இவர்களுக்கு ஏற்படும் குறைகளை ஆராய ஆணையர் என்ற தலைமை அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். இவருடைய அறிக்கைகள் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இவை எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் பாதுகாப்புகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கருதப்படும் கோட்பாடுகள் 46-வது பிரிவில் சொல்லப்பட்டு, அரசாங்கத்திற்கு வழிகாட்டும் கொள்கைகளாக இருந்து வருகின்றன.



அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோருக்குப் பொதுவான பிரச்னைகள் இருந்தாலும் அவர்களுக்குள் வேறுபாடும் உண்டு. அரிசனங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் பரவலாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சமூக-பொருளாதார-கலாச்சார உறவுகள் மிகவும் குறைவு. அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் மோதல்களும் இருந்திருக்கின்றன. தீண்டாமை என்னும் கொடுமையாலும் அவர்கள் துன்பப்படுகிறார்கள்.

பழங்குடிப் பிரிவு மக்கள் தனித்து வாழ்ந்து வருகிறார்கள். பலவிதத்தில் அவர்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களும், காடுகளும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்றன. அளவு கடந்து கடன்பட்டிருப்பதும், நிலத்தை இழந்திருப்பதும், கடன்காரர்களுக்கும், தரகர்களுக்கும் அடிமைப்பட்டிருப்பதும் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் ஆகும்.



ஏழை எளியவர்களுக்கு உதவும் திட்டம்

அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோர் முன்னேற்றத்திற்கான அரசாங்க முயற்சிகளில், சமீப காலத்தில் ஒரு வேகம் காணப்படுகிறது. இந்த வேகத்திற்கு வித்திட்டது 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரதம மந்திரி அறிவித்த 20 அம்சத் திட்டமேயாகும்!

1976-ல் முதல் தடவையாக ஓராண்டு முழுவதும் 20 அம்சத் திட்டம் செயல்பட்டது. இந்த ஓராண்டுக் காலத்தில் ஏழை எளியவர்களின் வாழ்க்கைத்தரம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது என்று தங்குதடையின்றிச் சொல்லலாம்.

''இருபது அம்சத் திட்டம் ஏழைகளை மேம்படுத்துவதற்கான முக்கியமான திட்டம்'' என்று வர்ணிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். நிலச்சீர் திருத்தங்கள், விவசாய வேலை பார்ப்பவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம், ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவது, கொத்தடிமை ஒழிப்பு, கிராமியக் கடன் ஒழிப்பு ஆகியவை 20 அம்சத் திட்டத்தில் முக்கியமானவை.

**1976 அக்டோபர் வரை 88,600 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்!**

**ஏழை எளியவர்களுக்கு 71 இலட்சம் வீட்டுமனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன! 3,29,000 வீடுகள் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன!**




**அரிசனங்களின் நலனுக்கு ரூபாய் 71.70 கோடி!**

இவர்களுடைய முன்னேற்றத்துக்காக திட்டங்களில் கூடுதலான பணம் செலவிடப்படுகிறது. 4-வது திட்ட காலத்தில் மொத்தம் 5 ஆண்டுகளில் 67.57 கோடி ரூபாய் அரிசனங்களின் நன்மைக்காகச் செலவிடப்பட்டது. ஆனால் 1976-77-ஆம் ஆண்டில் மட்டும் அரிசனங்களின் நலனுக்காக 71.70 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**இதுபோலப் பழங்குடிகளின் முன்னேற்றத் திட்டங்களுக்கு நடப்பு ஆண்டில் மட்டும் 218 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முந்தின ஆண்டில் செலவிட்டதை நோக்க இது இரு மடங்குக்கும் அதிகமாகும்!**



**அரசாங்கம் செய்யும் முயற்சிகள்**

அரிசனங்களுக்காக அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் மிகவும் விரிவானவை. அரசியல் மட்டத்தில் நாடாளுமன்றம், மாநில சட்டசபைகள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் அரிசனங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்துறையில் குறிப்பிடத்தக்கவை:—

நிலச்சீர்திருத்தம், உபரி நிலம் வழங்குதல், சிறுவிவசாயி—மிகச் சிறிய விவசாயிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், குறைந்த பட்ச விவசாயக் கூலி, விவசாய வேலைக்குக் கடனுதவி, வீட்டுமனை வழங்குதல், வீடு கட்டும் மனை வழங்குதல், வீடு கட்டும் செலவில் பெரும் பகுதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்வது முதலியன.



**தீண்டாமை ஒழிப்பில் தீவிரம்!**

இவர்களுக்குச் சமுதாயத்தில் நியாயமான இடம் கிடைக்க அரசாங்கம் எவ்வளவோ நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாகத் தீண்டாமைப் பழக்கத்தை இன்னும் கடைப்பிடிப்பவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க 'குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்' சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கோவில்கள் முதலியனவும், அவற்றைச் சேர்ந்த நிலங்களும் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாக இருந்தாலும் கூட அவையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன சரித்திர, சாஸ்திர, புராண அடிப்படையில் தீண்டாமையை






நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிரச்சாரம் செய்வதும், தீண்டாமை நியாயமானது என்று சொல்லுவதும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டிருக்கின்றன. சாலைகளைப் பெருக்குவது, பிணங்களை அப்புறப்படுத்துவது, உயிரினங்களை வெட்டுவது போன்ற வேலைகளைச் செய்யும்படி யாரையும் கட்டாயப்படுத்துவது குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இவ்விதக் குற்றங்கள் நிகழும் பகுதியில் வாழும் மக்களுக்குக் கூட்டு அபராதம் விதிக்கவும் மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

தீண்டாமைக் குற்றங்கள் சிறைத் தண்டனைக்கு உரியன என்றும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும், யூனியன் பிரதேசத்திலும் மூதிய போலீஸ் அலுவலர் ஒருவரின் பொறுப்பில் தனிப்பிரிவு ஏற் படுத்தி, அரிசனங்களுக்கு இழைக் கப்படும் கொடுமைகள் பற்றிய புகார்கள் கவனிக்கப்படுகின்றன. அரிசனங்களிடமிருந்து வரும் புகார்களைக் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டுமென்று நாடெங் கும் உள்ள போலீஸ் அலுவலர் களுக்கு கட்டளை இடப்பட்டிருக் கிறது. அரிசனங்களின் நலனை, கண்ணை இமை காப்பது போல் நிர்வாக இயந்திரம் பாதுகாத்து வருகிறது!

## கல்வி வளர்ச்சி

மற்ற துறைகளை விட, கல்வி வளர்ச்சி பெற்றுத்தான் இவர்கள் முன்னேற்றமடைய முடியும். ஆகையால் எல்லாக் கட்டங்களி லும் கல்விவசதி பெற அரசாங் கம் ஆவன செய்கிறது. நாடு முழுவதும் அரிசனங்களுக்கு உயர்நிலைப்பள்ளிப் படிப்பு வரை இலவசமாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உபகாரச் சம்ப ளங்கள் கொடுக்கவும், பள்ளிக் கூடச் சம்பளம், தேர்வுக்கட்ட ணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கவும், அவர்களுக்கு உணவு விடுதிகள் கட்டவும், புத்தகங்கள், எழுதுபொருள்களும் வழங்கவும் மாநில அரசாங்கங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு மேலே படிப்ப வர்களுக்கு உபகாரச் சம்பளம் உணவு விடுதி, பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான பொறுப்புக்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.



## உயர்கல்வியே உயர்வுக்கு வழி !

உயர்கல்வி மூலம்தான் சமூக-பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். மத்திய அரசே இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. 1974-75-ல் உபகாரச் சம்பளத் தொகை அதிகரிக்கப்பட்டது. மருத்துவக் கல்வி, பொறியியல்






படிப்பு, விஞ்ஞானத் துறையில் பட்டமேற்படிப்புகள், தொழில் துறை 'டிப்ளமா' படிப்புகள், மேற்படி பட்டப்படிப்புகள் என்று ஒவ்வொரு வகையான படிப்புக் கும்-அந்தந்தப் படிப்பின் தேவைக் குத் தகுந்தபடி - உபகாரச் சம் பளத் தொகை கொடுக்கப்படு கிறது. நடப்பு 5 ஆண்டுத் திட் டத்தில் உபகாரச் சம்பளத் தொகையாக 100 கோடி ரூபாய் செலவிடப்படும். !இது தவிர மாநில அரசாங்கங்கள் தங்கள் பங்காக 77 கோடி ரூபாயை உயர்கல்வி உபகாரச் சம்பளமாக இவர்களுக்குக் கொடுக்கின்றன.. இந்த ஆண்டில் 4 இலட்சம் பேர் இந்த உதவியைப் பெறுகிறார்கள். 25 ஆண்டு களுக்கு முன் 1950-51—இல் 2,180 பேர்தான் இவ்வகைஉபகாரச்சம்பளம் பெற்றனர். எனவே இந்த வகை யில் ஏற்பட்டிருக்கும் முன்னேற் றம் 200 மடங்காகும்!

அரிசனங்களுக்கும், பழங்குடி யினருக்கும் தேசிய வெளிநாட்டு உபகாரச் சம்பளங்களும் கொடுக் கப்படுகின்றன. உயர்கல்வி பெற இந்த இனங்களைச் சேர்ந்த 218 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 28 பேர் செல்வார்கள்.



## வேலைவாய்ப்பில் ஒதுக்கீடும், பயிற்சியும் !

படிப்பு முடிந்ததும் வேலை வேண்டும்! காலியாக இருக்கும் வேலைகளில் அவர்களுக்கு என்று சிலவற்றை ஒதுக்கி வைத்தால் மட்டும் பிரச்சினை தீராது! இந்த சாதிகளைச் சேர்ந்த இளைஞர் களுக்கு தனிப்பயிற்சி கொடுக்கப் பட்டால்தான், ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள முடியும். ஆகையால் இவர்களுக்கு, தேர் வுக்கு முன்னதாக தனிப்பயிற்சி வகுப்புகளை அரசாங்கம் நடத்து கிறது. 'ஐ. ஏ. எஸ்.', 'ஐ.பி.எஸ் போன்ற பெரிய பதவிகளிலும், கீழ்மட்டத்திலுள்ள பதவிகளிலும் அவர்கள் ஏராளமான பேர் இடம் பெற வேண்டும் என்பது தான் இந்த ஏற்பாட்டின் நோக் கம், இந்தத் தேர்வுகளுக்குப் போட்டியிடும் அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய மாண வர்கள் தேர்வில் அடையும் மதிப் பெண்களின் அடிப்படையிலேயே இப்போது ஒதுக்கப்பட்ட இடங் களுக்கு நியமனம் பெறுகிறார்கள். இவ்வாறு பயிற்சி கொடுக்கும் அகில இந்திய நிலையங்கள் தில்லி யிலும், அலகாபாத்திலும், சென்னையிலும், பாட்டியலா விலும், ஜெய்ப்பூரிலும், ஷில்லாங் கிலும் தொடங்கப்பட்டிருக்கின் றன. மத்திய பிரதேஷ், ஒரிசா மாநிலங்களைச் சேர்ந்த பழங் குடியினருக்காக ரெய்ப்பூரில் இன்னும் ஒரு நிலையம் தொடங் கப்பட இருக்கிறது. இந்த நிலை யங்களின் மூலம் பயிற்சி பெற்ற

அரிசனங்கள், பழங்குடியினர் 450 பேர் 'ஐ. ஏ. எஸ்', 'ஐ.பி. எஸ்' மற்றும் மத்திய ஊழியயங்கள் ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்,

இதுபோல மாநில அரசுப்பணிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மாநில அரசாங்கங்கள், 11 பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றில் வேலை பெற விரும்புபவர்களுக்கும் பயிற்சி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இணைக்கப்பட்ட பொறியியல் வேலைகளைப் பெற விரும்புவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிலையங்கள் ஹைதராபாத்திலும், திருச்சியிலும் தொடங்கபபட்டிருக்கின்றன.

பொதுத்துறையில் உள்ள எல்லா நிறுவனங்களும் வேலைகளில் குறிப்பிட்ட பங்கை இவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று சமீபத்தில் மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. தனியார் துறையில் இயங்கும் நிறுவனங்களிலும் இத்தகைய ஒதுக்கீட்டைக் கட்டாயப்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம்.

உயர்பதவிகளின் மூலமாக மட்டும் இந்த இனங்களைச்சேர்ந்த இளைஞர்களுக்குத் தேவையான வேலைகளைக் கொடுத்துவிட முடியாது. மூன்றாம்நிலை வேலைகளைப் பெறவும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். இதற்காக சென்னை, ஜபல்பூர், கான்பூர், தில்லி ஆகிய நகரங்களில் பயிற்சி மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நேர்முகப் பேட்டிகளில் தைரியமாகப்பதில் சொல்லவும், மூன்றாம் நிலைப்பதவிகளில் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்ற தைரியத்தை உண்டாக்கவும் இந்த நிலையங்களில் அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய இனங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு உதவி செய்யப்படுகின்றது.

## தொழில் தொடங்க உதவி !

இந்த இனங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கினால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய 11 மாநிலங்களில் தனி வாரியங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடை வைக்கவும், வியாபாரம் செய்யவும், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் ஆரம்பிக்கவும் இவை கடன் கொடுக்கின்றன. இந்த இனங்களைச் சேர்ந்த இளம் தொழில் முனைவர்களுக்கு இந்த வாரியங்கள் தக்க உதவி செய்வதற்கு வழிகாட்டும் குறிப்புக்களை மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அனுப்பியிருக்கிறது.



## வீடுகட்டிக் கொள்ள உதவி!


ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தனி வாரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. வீடு கட்டுவதற்கு மானியமாக ரூ. 1,200 கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பனி பெய்யும் மலைப் பகுதிகளில் ரூ. 3,000 கொடுக்கப்படுகிறது. ஐந்தாவது திட்டத்தில் அரிசனங்களின் வீட்டு வசதிக்காக 53.82 கோடி ரூபாய் செலவிடப்படும்.


## பழங்குடியினர் மேம்பாடு !

மாநில அரசுகள், தங்கள் வரவு செலவுத் திட்டங்களில் ஒரு பகுதியை அரிசனங்கள், மற்றும் பழங்குடியினர் ஆகியோர் மேம்பாட்டுக்கான திட்டங்களுக்காக ஒதுக்கி வருவது மிகவும் குறிப்பிடத் தகுந்த நிர்வாக முறை மாறுதல் ஆகும். ஆந்திரப் பிரதேச அரசு வரவு செலவுத் திட்டத்தொகையில் 15 சதவிகிதத்தை இவ்வாறு ஒதுக்கியிருக்கிறது. பீகார், அரியானா மாநிலங்கள் இந்தத் தலைப்பில் எவ்வளவு பணம் ஒதுக்கலாம் என்பதை முடிவு செய்ய குழுக்களை அமைத்துள்ளன. கர்நாடகத்தில் விவசாயம், கால்நடை, மீன், தொழில்துறைகளில் இந்த இனங்களுக்கு தனியே ஒதுக்கீடுகள்செய்யப்பட்டிருக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் சில திட்டங்களில் 20 சதம் அரிசனங்களுக்காகஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில், இது குறித்த பல திட்டங்கள் செயல்பட இருக்கின்றன.

மாநில அரசுகள் அமல்படுத்தும் சிறப்பான இந்தத் திட்டங்கள், பொதுவான பழைய திட்டங்களுக்கும், இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் பக்கபலமாக இருந்து, இந்த இனத்தவரின் முன்னேற்றத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பழங்குடியினரின் நலனுக்கான திட்டங்களைப் பார்ப்போம்.






1976-ஆம் ஆண்டில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. குறைந்த காலத்தில் பயனுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. குறித்த கால அளவுக்குள் கண்டிப்பாகத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்ருக்கிறது. பழங்குடி மக்கள் பெரிய அளவில் வாழ்கிற மாநிலங்களின் முதல் அமைச்சர்களை அழைத்து, இரண்டு முறை மாநாடுகள் கூட்டி, கலந்து பேசியிருக்கிறோம். புதிதாகக் கையாளப்படும் முறை இரண்டு கட்டமாகச் செயல்படுத்தப்படும்.

### கேடுகள் களையப்படும்!


முதல் கட்டத்தில் பழங்குடியினருக்குக் கேடு ஏற்பட்ட காரணங்கள் அகற்றப்படும். அவர்களுக்கு கள், சாராயம் முதலியவற்றை விற்று அவர்களைகொள்ளையடித்து வருவதைச் சிலர் தொழிலாகக்கொண்டிருந்தார்கள். இது தடுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியினருக்குத் தங்கள் சொந்த உபயோகத்துக்குத் தேவையான கள் உற்பத்தி செய்வதையோ, சாராயம் காய்ச்சுவதையோ அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அரசாங்கமே இலாப-நட்டமில்லாமல் இந்த வியாபாரத்தைச் செய்யும். இவர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படுவதும் தடுக்கப்படும். 30 ஆண்டுகள் வரையில் நிலங்கள் கைமாறிய விதம் சரிபார்க்கப்பட்டு அநியாயமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மீண்டும் பழங்குடியினருக்கு வழங்கப்படும். மற்றொரு கொடுமை, காடுகளில் ஒப்பந்தக்காரர்களால் இழைக்கப்பட்டிருக்கிறது. பழங்குடியினர் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு வெட்டி சேர்த்த குச்சிகளையும், மரத் துண்டுகளையும் ஒப்பந்தக்காரர்கள் அவர்களைப் பயமுறுத்தி மிகச் சொற்ப விலை மட்டும் கொடுத்து கொள்ளையடிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின்படி பழங்குடியினரிடமிருந்து இந்தப் பொருள்களை நியாயமான விலைக்கு அரசாங்க அதிகாரிகள் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இடைத்தரகர்கள், நிலத்தைப் பறிப்பவர்கள், ஒப்பந்தக்காரர்கள், லேவாதேவிக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விடுதலை பெற்று, பழங்குடி மக்கள் விரைந்து முன்னேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



### பொருளாதார முன்னேற்றம் அடைய ஊக்குவிப்போம்!

அடுத்த கட்டமாகப் பொருளாதார முன்னேற்றம் அடைய அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் அவர்கள் அப்பாவிகள்! எனவே, கடன் கிடைத்தால்தான், தங்களுக்குத் தேவையான பொருள்களை அவர்களால் வாங்கிக் கொள்ள முடியும். அதற்காகப் பெரிய அளவில் பலநோக்குச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றின் மூலம் அவர்களுக்குத்தேவையான உணவு, உடை, மற்ற பொருள்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இத்தகைய சங்கங்கள் ஏற்படுவதற்கு காலக்கெடு குறிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதிகளிலாவது மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினர் 50 சதம் இருந்தால் இந்தப் பகுதிக்கு ஒரு துணைத் திட்டம் வகுக்க வேண்டுமென்று மாநில அரசாங்கங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இந்தத் துணைத் திட்டங்கள் பழங்குடியினருக்கு எல்லா வகையான உதவிகளும், நன்மை





களும் புரியக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த வகையில் 5-ம் திட்ட காலத்தில் மத்திய அரசின் உதவி 200 கோடி ரூபாயாக இருக்கும்.


**துணைத் திட்டப் பகுதிகள்:**

துணைத் திட்டப் பகுதிகள், நாட்டில் வாழும் பழங்குடியினரில் 70 சதப்பேர்களுக்குப் பயன்படும். 18 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் துணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு துணைத் திட்டத்திலும் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்கள் அடங்கியுள்ளன. இத்தகைய 104 திட்டங்கள் தயாரித்து முடிந்து, செயல்படுத்தப்பட இருக்கின்றன. மேலும் பல திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட மாறுதல்களால் 1975-76-ல் 110 கோடி ரூபாயாக இருந்த திட்டச்செலவு இப்போது ரூபாய் 218 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் இதற்கு மேலும் 40 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டில் இன்னும் கூடுதலாக 55 கோடி ரூபாயும் தேவைப்படும்.

துணைத்திட்டம் அமல் செய்யப்படும் பகுதிகளை அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையின்கீழ், அட்டவணைப் பிரதேசமாக அறிவிக்கலாமா என்பது பற்றி அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

கடந்த ஓரிரு ஆண்டுகளில் பழங்குடியினர் மிகப்பெரிய அளவில் முன்னேறியிருக்கிறார்கள். பிரதம மந்திரியின் அக்கறையும், 20 அம்சத் திட்டத்தின் செயல்முறையுமே இதற்குக் காரணமாகும்.







வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனை!

நம்நாட்டில் உள்ள ஏழை மக்களை முன்னேற்ற வேண்டுமென்று எவ்வளவோ காலமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். சுதந்திரத்துக்குப் பிறகு இதற்காகப் பல முயற்சிகளையும் செய்திருக்கிறோம். ஆனால் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற உறுதியான முன்னேற்றம் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதைப்பற்றி இந்த நாட்டின் நிர்வாகம் பெருமைப்படலாம். உலகத்திலேயே வேறு எந்த அரசாங்கத்தாலும் இவ்வளவு குறுகிய காலத்தில், ஏராளமான பேருக்கு இவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டதில்லை. கோடிக்கணக்கான மக்களிடம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் ஏழ்மை என்னும் தீராத பிரச்சினையைத் துணிந்து தீர்க்க இந்தியா முயன்று வெற்றி காணத் தொடங்கியிருக்கிறது என்று நாம் தைரியமாகச் சொல்லாம்.

*நன்றி :*
பத்திரிகைத் தகவல்
அலுவலகம்,
சென்னை.



## தனுஷ்கோடிக்கு மீண்டும் ரயில்!

பாம்பன்பாலம், 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயலில் சேதம் அடைந்ததைத் தொடர்ந்து, தனுஷ்கோடிக்கும், பாம்பனுக்கும் இடையே ரயில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு இருந்தது. 15 மைல் தொலைவுள்ள இந்த ரெயில் பாதையைச் சீர்படுத்தி மீண்டும் ரயில் போக்குவரத்தை ஏற்படுத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது. இந்த தகவலை மதுரைக்கு வந்து இருந்த மத்திய ரயில்வே அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள் தெரிவித்தார்.

“ராமேசுவரத்துக்கு இந்தியா முழுவதிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் செல்கிறார்கள். தனுஷ்கோடி - பாம்பனுக்கும் இடையே ரயில் போக்குவரத்து இல்லாததால் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் பல்வேறு அமைப்புகள் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து, ரயில் பாதையைப் புதுப்பிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வேலை இந்த ஆண்டு (1977–78) மேற்கொள்ளப்படும்” என்று அவர் கூறினார்.












# இந்தியாவில் கல்வி வளர்ச்சி!

நமது நாட்டின் சமுகப் பொருளாதார— கலாச்சார மேம்பாட்டிற்கு முக்கியத் தடையாக இருப்பது கல்லாமையே! எனவே, கல்லாமையை அடியோடு களைவதற்கு, சுதந்திரம் பெற்ற இந்திய அரசாங்கம் முதல் முன்னுரிமை வழங்கி யுள்ளது.

இந்தியாவில் கல்வி அறிவூட்டும் திட்டங்கள் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1947-ஆம் ஆண்டில் 14 சதவிகிதமாக இருந்த கல்வி அறிவு பெற்றவர்கள் விகிதம், தற்போது 33.85 சதவீதமாக இருப்பதாகக் கடைசியாக வெளியிடப்பட்ட தகவல் மூலம் தெரிய வந்துள்ளது. 4 வயது வரை உள்ள குழந்தைகள் இந்த எண்ணிக்கையில் இடம் பெற மாட்டார்கள். இந்தக் காலத்தில் 5 கோடியே 33 இலட்சமாக இருந்த கல்வி அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை, 15 கோடியே 81 இலட்சமாக உயர்ந்துள்ளது.

நாட்டில் கல்வியறிவு இல்லாமையைக் களையும் வகையில் தேசிய சேவைத் திட்டம், விவசாயிகள் தேசிய கல்வியறிவுத் திட்டம், 15 வயது முதல் 25 வயதிலான பிரிவினருக்கு முறைசாரா கல்வித் திட்டம், முதிய பெண்களுக்கான கல்வியறிவுத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களைக் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு மாணவரும் 5 பேருக்கு கல்வியறிவு ஊட்டவேண்டும் என்ற தேசிய சேவைத் திட்டத்தில், 2 இலட்சத்து 78 ஆயிரம் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கான கல்வி அறிவூட்டும் திட்டத்தின்கீழ் 5 இலட்சம் விவசாயிகள் கல்வி அறிவூட்டப்பட்டுள்ளனர்!

முறைசாரா கல்வித்திட்டத்தின்கீழ் 2 இலட்சத்து 59 ஆயிரம் முதியோர்கள் கல்வி கற்று வருகிறார்கள்!

முதிய பெண்களுக்கான கல்வி அறிவுத் திட்டத்தின்கீழ் 30 ஆயிரத்து 500 பெண்கள் கல்வி அறிவு பெற்று வருகின்றனர்!







# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.



கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

## கோ-ஆப்டெக்ஸ்

ஆடை அணிபவர் அதன் தனிச்சிறப்பை அறிவர்.

பண்டைச் சிறப்பும் நவீன நளினமும் இணைந்து திகழ்வது வண்ணத்துப்பூச்சி



# வெற்றிக் கொடி பெற்றவர்களுக்கு வாழ்த்து!

## —ஆளுநர் உரை


"இந்த நல்ல விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு உண்மையிலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியா முழுதும் உள்ள 16 என். சி. சி. இயக்குநர் அகங்கள் பங்கெடுத்து டில்லியில் நடைபெற்ற போட்டியில், தமிழ்நாடு—பாண்டிச்சேரி என். சி. சி. அணியினர் வெற்றி பெற்று ''வெற்றிக் கொடியை'' அடைந்துள்ளதற்கு எனது மனப்பூர்வமான பாராட்டுதல்களை வழங்குகிறேன். அதிலும், இந்தப் பரிசு—வெற்றிக் கொடி நமது பெருமதிப்பிற்குரிய பிரதமர் அவர்களின் கரங்களினால் பெறப்பட்ட நிகழ்ச்சி, பரிசின் மதிப்பையே மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளது.

"தற்சமயம் தமிழ்நாடு-பாண்டிச்சேரி மண்டலத்தில் 19040 பேர், முதுநிலை என். சி.சி. அணியிலும், 70 ஆயிரம் பேர் இளநிலை என். சி. சி. அணியிலும் அங்கம் வகிக்கின்றனர் என்பதிலிருந்தே, இந்த என். சி. சி. அணியின் பெருமை தெளிவாகத் தெரிகிறது. உண்மையில் என். சி. சி. அணியினரை, நாட்டுப் பாதுகாப்புப் படையின் இரண்டாம் வரிசையாக நாம் கருதுகிறோம் என்பதை உங்களுக்கு நினைவுறுத்தத் தேவையில்லை என நினைக்கிறேன்.

"ஒழுங்குமுறையும், பயிற்சி முறையும் பெற்ற இந்த மனித சக்திப் படையை, நாட்டின் உறுதுணைக்காக நாம் அமைத்திருக்கிறோம். அதே நேரத்தில்-மாணவர்கள் தலைமைப் பொறுப்புகளுக்கு தங்களைத் தகுந்தவர்களாக ஆக்கிக் கொள்வதற்கும், நற்குணங்கள் உருவாக்கிக் கொள்வதற்கும், தோழமை உணர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும்—போட்டி விளையாட்டுகளில் பேராற்றல் பெற்றுக் கொள்வதற்கும்—சேவை செய்யும் மனப்பான்மையை அடைந்து கொள்வதற்கும் உரிய பயிற்சியை இந்தப் படையின் அமைப்பு ஏற்படுத்தித் தருகிறது. என். சி. சி. படையினராகிய நீங்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாவன:

''புன்னகையுடன் பணிந்து நட; காலம் தவறாதே! குழப்பமின்றியும் கடினமாகவும் உழை! பொய் சொல்லாதே! மன்னிப்பு கேட்கும் சூழ்நிலைக்கு வராதே!

"டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின என். சி. சி. முகாமிலும் பிரதமரின் ஊர்வலத்திலும் அனைத்து இயக்குநர் அகங்கள் கலந்து கொண்ட போட்டியில் நமது தமிழ்நாடு—பாண்டிச்சேரி அணி வெற்றிக் கொடியைப்



என். சி. சியைச் சேர்ந்த வீராங்கனைக்கு ஆளுநர் பரிசளித்தல்

பெற்றிருப்பதற்கு நாம் மிகவும் பெருமைப் படுகின்றோம். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இது, நாம் ஏழாவது முறையாகப்பெற்ற வெற்றியாகும்.

"சாலை அமைப்பதிலும், மரம்-செடி நடுவதிலும், குளங்களைச் சுத்தப்படுத்துவதிலும், இரத்ததானம் செய்வது, பண்டையப் பொருள்களைப் பாதுகாப்பது-சுத்தம் செய்வது, கிராமத்து மக்களுக்குக் கல்வியறிவு, சுகாதாரம், நல்வாழ்வு ஆகியவற்றை போதிப்பது போன்ற சமூகநலப் பணிகளில் என். சி. சி. அணியைச் சேர்ந்த படை வீரர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை நானே நேரடியாகப் பார்த்திருக்கிறேன். முக்கியமாக அண்மையில் சென்னையில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது, மிகவும் ஒத்துழைப்புடன் மீட்புப் பணியில் ஈடுபட்ட—என். சி. சி. வீரர்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுடைய தன்னலமற்ற மீட்புப் பணி, அநேக உயிர்களைக் காப்பாற்றும் வாய்ப்பை உங்களுக்கு வழங்கியது. எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் வந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்காக கிண்டியிலும், அண்ணாநகரிலும் மீட்பு மையங்களை அமைத்திருக்கின்றீர்கள் என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

"நாடெங்கிலுமுள்ள வீரர்களை—மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள வீரர்களை-முகாம்களில் ஒருங்கிணைத்து வருவதன் மூலம், தேசிய ஒற்றுமைக்கு மாபெரும் பணியை ஆற்றி வருகிறது என். சி. சி. படை. இது கடமையுணர்வையும், பொறுப்பு உணர்வையும், விடாமுயற்சியையும் இளைய சமுதாயத்தினரிடையே ஏற்படுத்துகிறது. உங்களது தேசியப்பற்றுமிக்க பணிகளாலும்-தன்னிகரற்ற தொண்டுகளினாலும், நாட்டை வலுவானதாக்க முடியும் என நான் நம்புகிறேன்.

"உங்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

[3-2-'77 அன்று தமிழ்நாடு-பாண்டிச்சேரி என். சி. சி. அணியினருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.]

## சரஸ்வதி மகால் தேசிய நூலகமாகும்!

தஞ்சையிலுள்ள புகழ் பெற்ற சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை ஒரு தேசிய நூல் நிலையமாக உயர்த்த, தமிழ்நாடு அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் மத்திய அரசு உதவி கொண்டு, மேற்கண்ட நூல் நிலையத்தின் கட்டடம் கட்டப்படும்.



# தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் தன்னிகரற்ற பணிகள்

**வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்.**

தமிழ்நாடு பால்வள நிறுவனம் மிக நல்ல முறையில் வெற்றிகரமாகப் பணி ஆற்றி வருகிறது. 1975-76 நிதி ஆண்டில், அதனுடைய நிதிமுறைகள் வருமாறு:

| | ரூபாய் (இலட்சம்) |
|---|---|
| மொத்தப் பணத் தொகை | 1,318.03 |
| செலவுத் தொகை (தேய்மானம் மற்றும் வட்டி ஆகியவை மதிப்பிடப்படுவதற்கு முன்) | 1,207.87 |
| கழிவு நீக்காத இலாபம் | 110.16 |
| வட்டி | 33.74 |
| வட்டிக்குப் பின்னர் இலாபம் | 76.42 |
| தேய்மானம் | 51.67 |
| நிகர இலாபம | 24.75 |

1975-76 நிதியாண்டில், பால் வளர்ச்சிக் கழகம் பால் கொள்முதல் வகையில், தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில் உள்ள 5,090 கிராமங்களின் 2,42,293 விவசாயிகளுக்கு ரூ. 673.50 இலட்சம் வழங்கியுள்ளது. 31-12-76 வரை 1,532 கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பால் கொள்முதல் செய்யப்பட்டது. இவற்றில் 1,028 சங்கங்கள் குஜராத் பாணியில்- இயங்குகின்ற (அதாவது பாலில் உள்ள கொழுப்புச் சத்துக்கு ஏற்ப விலையைப் பெறுகின்ற) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். இதில், பால், கிராமத்து நிலையிலேயே சோதனை செய்யப்பட்டு விடுகிறது. பால் 24 நிலையங்களில் குளிர்பதனப்படுத்தப்பட்டு, ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள கிராமப்புற பால்பண்ணைகளில் சூடாக்கி துப்புரவு செய்யப்பட்டு, இறுதியாக, சென்னை மதுரை ஆகிய இடங்களில் உள்ள பெரிய பால் பண்ணைகளால் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சென்னை நகரில், 543 விற்பனை மையங்களின் மூலமாக நாள்தோறும் ஏறக்குறைய 2 இலட்சம் லிட்டர் பால் சில்லறையாக விற்பனை செய்யப்படுகிறது. பகல் முழுதும் விற்பனை செய்யப் பெறும் பால்கடைகள் 90-ம் இவற்றில் அடங்கும். பால்வள நிறுவனம் மதுரையில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் விற்பனையை ஏற்படுத்தியுள்ளது. விற்பனை செய்யப்பட்டது போக, உபரியாக உள்ள பால் அனைத்தையும், வெண்ணெய்யாகவும், பால் பவுடராகவும் மாற்றுகிறது. மதுரைப் பால்பண்ணையில் 80 ஆயிரம் லிட்டர் பாலை, பவுடராக்கும் ஆற்றல் பெற்ற இயந்திரம் உள்ளது. 1976 டிசம்பர் மாதத்திலிருந்து இந்த இயந்திரம் தன் முழு ஆற்றலுடன் பணியைச் செய்து வருகிறது.



நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் பால் விற்பனை நிலையத் தொடக்க விழா

*1975-ஆம் ஆண்டிற்கும் 1976-ஆம் ஆண்டிற்கும் இடையேயுள்ள வளர்ச்சி பின்வருமாறு:*

| | 1975 | 1976 |
|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 786 | 1,532 |
| கிராமங்களின் எண்ணிக்கை | 3,145 | 5,090 |
| பால்வழங்கும் விவசாயிகள் | 1,83,552 | 2,42,293 |
| திரட்டப்பட்ட பாலின் அளவு | 341.03 (இலட்சம் லிட்டர்) | 512.78 (இலட்சம் லிட்டர்) |
| விற்பனை செய்யப் பெற்ற வெண்ணெய் மற்றும் நெய் | 231 (இலட்சம் கிலோ) | 6.11 (இலட்சம் கிலோ) |

**சென்னை நகருக்கு 1977-ஆம் ஆண்டுக்குரிய திட்டங்கள்**

நடப்பு நிதியாண்டில் சென்னையில் தற்போது நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டராக இருந்து வரும் பால் விற்பனையை 2.50 இலட்சம் லிட்டராகப் பெருக்குவதற்குத் திட்டமிட்டு வருகிறது. இதற்காக 50 புதிய பால் விற்பனை நிலையங்களும், 20 புதிய பால் விற்பனைக் கடைகளும் நிறுவப்பட இருக்கின்றன.

பால் கொள்முதல் விலையில் உயர்வுகள் ஏற்பட்டிருந்த போதிலும், கடந்த 2 ஆண்டுகளாக விற்பனை செய்யப்படும் பாலின் விலையில் எந்தவித உயர்வையும் ஏற்படுத்தாமல், ஒரே விலையில் விற்பனை செய்து வருகிறது பால்வள நிறுவனம். தரப்படுத்தப்பட்ட பாலின் விலை லிட்டர் ரூ. 2, வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலின் விலை லிட்டர் ரூ. 1.80, சுவையூட்டப்பட்ட பால் பாட்டல் 0.60 காசு, வெண்ணெய் கிலோ ரூ. 16, நெய் கிலோ ரூ. 20 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது.


சென்னை நகர மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பாலிதின் பைகளில் பால் நிரப்பும் இயந்திரங்கள் இரண்டு பிரான்சு நாட்டிலிருந்து விமானம் மூலம் வரவழைக்கப்பட்டுள்ளன.

தற்போது, நகரத்தில் பெரும்பான்மையாக விரும்பப்படும் இனிப்புத் தயிர் (யோகர்ட்) விற்பனை நடப்பு ஆண்டில் இருமடங்காக அதிகரிக்கும். மார்ச் திங்கள் முதல், இந்நிறுவனம் தயிர் விற்பனையையும் துவக்க இருக்கிறது. ஏற்கெனவே உள்ள 4 தானுக இயங்கும் பால் விற்பனை இயந்திரங்கள் தவிர, மேலும் நான்கு தானுக இயங்கும் பால் விற்பனை இயந்திரங்கள் 1977 ஏப்ரல் மாதத்திற்குள் நிறுவப்படும். இதேபோன்று மேலும் 17 இயந்திரங்கள் இவ்வாண்டு மத்தியில் நிறுவப்பட உள்ளன.

அம்பத்தூர் பால்பண்ணை, சென்னை அறுவை மருத்துவக் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் நடமாடும் வண்டி மூலமாக, பால் விற்பனை முறையை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்குரிய ஆய்வுமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொடைக்கானல் பால் வளச் சங்கத்திஞல் தயாரிக்கப்படும் உப்பிடப்பட்ட பாலடைக்கட்டிகளை, சென்னை நகரில், 6 பால் விற்பனைக் கூட கடைகளின் மூலமாக, பால்வள நிறுவனம், விற்பனை செய்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் நகரில் இதன் விற்பனையை இருமடங்காக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் பண்ணையில் மாடுகளின் தோற்றம்





பட்டதாரி ஒருவரால் நடத்தப்படும் பால் பண்ணை

அடையாறு பாலச்சாலை, கிண்டிச் சாலை, எலியட்ஸ் கடற்கரைச்சாலை ஆகிய மூன்று தெருக்களும் சந்திக்கும் முச்சந்திப்பில், பூங்கா விற்பனைக் கடை (Garden Milk Bar) உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் மாதம் 15-ஆம் தேதிக்குள் இது துவக்கப்படலாம். தமக்குக் கிடைத்து வரும் ஓய்வு நேரத்தை தமது குடும்பத்தினருடன் உல்லாசமாகப் போக்க விரும்பும் பொது மக்களுக்குப் பயன்தரும் வகையில் இந்தத் திட்டத்தை ஆய்வு முறையில் துவக்குகிறது பால்வள நிறுவனம். இந்தப் பூங்காப் பால் விற்பனைக் கடையில், பொது மக்கள் உல்லாசமாகப் பொழுது போக்குவதுடன், பால்வள நிறுவனத்தால் தயாரிக்கப் பெறும் எல்லா வகை உண்பொருள்களையும் அதே சமயத்தில் அதே இடத்தில் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது.

இந்நிறுவனம், முதன் முறையாக, பால் சம்பந்தப்பட்ட சமையற்கலைப் போட்டி ஒன்றை, தாய்மார்களுக்கு, பிப்ரவரி 20-ஆம் தேதியன்று நடத்தத் திட்டமிட்டுள்ளது.

**பால் கூடாரத்தில்...**

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் ஏற்கெனவே நெடுஞ்சாலைகளில் பால் விற்பனைக் கடைகளைப் பால்வள நிறுவனம் உருவாக்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இன்னும் சில நெடுஞ்சாலைகளில் பால் விற்பனைக் கடைகளைத் திறக்க முடிவு செய்துள்ளது. அவைகளில் ஒன்று, கிராண்ட் ட்ரங் சாலையில் மதுராந்தகத்தின் அருகே உள்ள அச்சிறுப்பாக்கத்தில் அமைக்கப்பட உள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சிறுப்பாக்கத்திலும், தர்மபுரி நகரத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள தேனியிலும், ஒவ்வொன்றும் 10 ஆயிரம் லிட்டர் பாலை குளிர்பதனப்படுத்தும் ஆற்றலும் 20 ஆயிரம் லிட்டருக்கு அபிவிருத்தியாகும் வகையிலும் உள்ள குளிர்பதனப்படுத்தும் இயந்திரங்கள் 3 நிறுவப்பட்டு வருகின்றன. இந்த 3 இயந்திரங்களும் இன்னும் ஒரு மாதத்திற்குள் செயல்பட உள்ளன. இந்த விரிவாக்கம் எல்லாம், பால்வள நிறுவனத்தின் சொந்த நிதி ஆதாரங்களினுல்தான் செய்யப்படுகின்றன. அம்பத்தூர் பால்பண்ணையை அமைப்பதற்கும் மதுரையில் பால்பவுடர் இயந்திரத்தை அமைப்பதற்கும் தவிர, வேறு எந்தப்பணிக்கும் எந்தவிதக் கடனையும் பால்வள நிறுவனம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**புதிய பால் பண்ணைகள்**

ஈரோட்டில் புதிதாக துணை பால் பண்ணை ஒன்றை-ரூபாய் 231.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு, பால்வள நிறுவனத்தின் நிர்வாகக்குழு அனுமதியளித்துள்ளது. இது ஈரோடு பால் உற்பத்தியாளர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது. 32 இலட்சம் ரூபாய் செலவில் இரு குளிரூட்டும் நிலையங்களையும், 70 இலட்ச ரூபாய் செலவில் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையத்தையும் ஈரோடு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் அமைக்க, பால்வள நிறுவனம் அனுமதியளித்துள்ளது.

சேலத்திலும் ஜோலார்பேட்டையிலும் புதிய பண்ணைகளை அமைப்பதற்குப் பால்வள நிறுவனம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. ஆய்வுகள் நடைபெறுகின்றன. இது பற்றி ஒரு மாத காலத்தில் முடிவெடுக்கப்படும், இந்த இரு பால் பண்ணைகளும், பாலை பவுடராகவும், வெண்ணெய்யாகவும் மாற்றும் பணிகளை நிறைவேற்றும்,

**புதிய பாலடைக்கட்டித் தொழிற்கூடம்**


மேற்குத் தொடர்ச்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொடைக்கானலில், ரூபாய் 12.50 இலட்சம் செலவில் நவீன முறையில் பாலடைக் கட்டிகளைத் தயார் செய்யும் இயந்திரங்களை நிறுவுவதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது.

**அரிசன நலத் திட்டம்**

அரிசன மக்களுக்கு உதவப் புதிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு துவக்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் 15 அரிசன கூட்டுறவுப் பால் சங்கங்களும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 அரிசன கூட்டுறவுப் பால் சங்கங்களும் நிறுவப்படும். இதன் மூலம் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும், 10 மாத காலத்திற்குள், சுமார் 100 உறுப்பினர்கள், கால் நடைகள் வாங்குவதற்காகக் கடன் தொகை பெறுவர். ஒவ்வொருவருக்கும் இரண்டு மாடுகள் வாங்கக் கடனுதவி வழங்கப்படும். இதில் ரூ. 500 மானியமாகத் தரப்படும். இதன் மூலம் பயன் பெறும் உறுப்பினர்கள், கறவைமாடுகளை வாங்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள். இவை தவிர, 4,500 உறுப்பினர்கள் கொண்ட 104 அரிசன கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன.

**கன்று வளர்ப்புத் திட்டம்**

மத்திய அரசின் உதவியுடன், தமிழ்நாடு அரசால் வலியுறுத்தப்படும் திட்டமான, கன்று வளர்ப்புத் திட்டத்தைப் பால்வள நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இந்நிறு



உயர்ந்த ரகக் கன்றுகள்

வனத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ. 455 இலட்சத்தினை மூன்று ஆண்டுகளுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், மூன்று மாதம் முதல் 28 மாதம் வரையில் உள்ள 25 ஆயிரம் கன்றுகள் வளர்க்கப்படும். இத்திட்டத்தின் முக்கியக் கொள்கை-விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை மக்களுக்கும் கலப்பினக் கன்றுகளை கன்று ஈனும் பருவம் எய்தும்வரை முறையாக வளர்ப்பதற்கு உதவி செய்வதேயாகும். இவைகளுக்குத் தேவையான தீவனங்களையும் இந்நிறுவனம் வழங்கும். இத்திட்டம் மதுரை, கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப் பெறும். கலப்பினக் கடேரி கன்று ஒவ்வொன்றுக்கும் 1,600 ரூபாய் விலையுள்ள, 16 குவிண்டால் அளவுள்ள கால்நடைத் தீவனம் 25 மாதங்களுக்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினரால் வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயி சாயிகள் விஷயத்தில் அரசின் மானியத் தொகை 50 சதவீதமாகவும், விவசாயத் தொழிலாளர்கள் விஷயத்தில் மானியம் 62-2/3 சதவீதமாகவும் இருக்கும். தீவனத்தின் மீதி விலை, பாங்கு நிதியினால் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகள் பல, அங்கம் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனடைய உள்ளோர், தேர்ந்தெடுப்பும், கன்றுகள் பதிவு முறையும் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் நடப்பு ஆண்டின் மத்தியில் நல்ல பலனைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப இடுபொருள்கள்

பால் உற்பத்திப்பணியில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பது பால்வள நிறுவனத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும். இதன்மூலம் உற்பத்தியாளர்களின் வீடுகளுக்குச் சென்று தொழில் நுட்ப இடுபொருள்கள் வழங்குவதன் மூலம் பால்வள நிறுவனத்திற்கு வருமானத்தையும் இந்தத் திட்டம் அளித்திருக்கிறது. ஏறக்குறைய 1,000 கிராமங்கள், தற்சமயம் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளன. விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று, செயற்கை முறை கருத்தரிப்புச் செய்தல், கால்நடை மருத்துவரால் வாரம் ஒருமுறை சிகிச்சையளிக்கப்படுதல், 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ள நடமாடும் சிகிச்சை நிலையங்கள், நியாயவிலையில் கால்நடைத் தீவனம் வழங்கும், பருத்திவிதை, வைக்கோல் முதலியன வழங்குதல், ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

### கால்நடைத் தீவன இயந்திரம்

ஒரு மணி நேரத்தில் 4-லிருந்து 5 டன் வரை உற்பத்தி செய்யும் கால்நடைத் தீவன இயந்திரம், இந்நிறுவனத்தால், மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரம், மாதம் ஒன்றிற்கு 2 ஆயிரம் டன் வரை உற்பத்தி செய்கிறது. இதேமாதிரியான இயந்திரத்தை இந்நிறுவனம் சமீபத்தில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து எடுத்துக் கொண்டுள்ளது. 1975-76-ல் வருமானம் ரூ. 41 இலட்ச ரூபாயாக இருந்ததற்கு மாறாக 1976-77-ல் வருவாய் 150 இலட்ச ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கால்நடைத் தீவனங்கள் சிலவற்றின் விலைகளில் ஏற்றம் ஏற்பட்ட போதிலும், பால்வள நிறுவனம் அவற்றை கிலோ ஒரு ரூபாய் என்றே தொடர்ந்து விற்பனை செய்து வருகிறது.

### புறநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள்

கொள்முதல் செய்வதிலும் பால் குளிரூட்டும் குறைகளிலும் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் பொருட்படுத்தாமல் சென்னை, மதுரை ஆகிய இடங்களைத் தவிர, வேறு புறநகர்ப்பகுதிகளிலும், தனது வாணிகத்தை மெதுவாக விரிவுபடுத்தி வருகின்றது பால்வள நிறுவனம். பழனி, திண்டுக்கல் உட்பட மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 23 சிறிய புறநகர் மையங்களிலும் பால் விற்பனை செய்யப்படுகின்றது. ஈரோடு, பவானி ஆகிய நகரங்களிலும் பால் வாணிகம் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த வாணிகம் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஏனைய முக்கிய நகரங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட இருக்கிறது. ஆம்பூரிலும் நல்ல முறையில் பால் வாணிகம் நடைபெற்று வருகிறது. காஞ்சி



உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பால் விற்பனை செய்யக் காத்திருக்கும் உற்பத்தியாளர்கள்

புரம், செங்கற்பட்டையும் சேர்த்து, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள புறநகர் மையங்களில் பால் வாணிகம் செய்வதற்குரிய வாய்ப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல், தஞ்சாவூர், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும்-தனது செயல்முறைகளை விரிவாக்கம் செய்வதற்கு, பால்வள நிறுவனம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் புறநகர் மையங்களில் எல்லாம் பால் விற்பனை உள்ளூர் கூட்டுறவுச் சங்கங்களால்-குறிப்பாக-நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிறது.

**புதிய உற்பத்தியாளர் சங்கங்கள்**

ஈரோட்டிலுள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பதிவு செய்யப்பட்டு, தனது பணியைத் துவக்கிய உடனேயே, இதேபோன்ற சங்கங்களை ஏனைய மாவட்டங்களிலும் அமைப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதிய பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பதிவு செய்யப் பெற்று தனது பணியைத் துவக்கியுள்ளது. கோவையில் முன்பே இருந்து வந்த பால் விநியோகச் சங்கம், கோவை நகரில் பால் விற்பனையைச் செய்து வருகிறது. புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பால் கொள்முதலையும், பால் குளிரூட்டும் பணிகளையும் கவனித்து வருகிறது. இதைப் போலவே, அயனாவரம் பால் விநியோக சங்கம், முழு பால் உற்பத்தியாளர் சங்கமாக மாற்றப்பட்டு வருகிறது. இது நடப்பு ஆண்டில் ஏப்ரல் முதல் தேதியன்று, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதையும் அடக்கும் எனத் தெரிகிறது. அந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் புதிய உற்பத்தியாளர் ஒன்றியம் ஒன்று அமைக்கப்படுகிறது. இதில் ஏற்கெனவே 118 உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன.


**கால்நடைகள் வாங்குவதற்குக் கடன் வசதி**

தமிழ்நாட்டில் கால்நடைகள் வாங்குவதற்குரிய கடன் வகைகள்—தமிழ்நாடு பால்வள நிறுவனம் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கம்-வங்கிகள், மற்றும் விவசாயிகள் ஆகிய மும்முனைப் பிணைப்பின் மூலமாக வழங்கப்படுகின்றன. இந்த மும்முனைப் பிணைப்பு ஏற்பட்டவுடன் பால் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் ஒவ்வொரு சங்கத்தையும் ஆதாரப்படுத்துவார். .பாலைச் சேகரிப்பதும், பால் கணக்கிலுள்ள கடன் தவணைகளைக் கணக்கிடுவதும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அல்லது பால் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகை நடைமுறை கடந்த 3 ஆண்டுகளில் மிக நல்ல விதத்தில் பயன்பட்டுள்ளது. சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் ஆகியோருக்கு முறையே 1975-ல் ரூ. 1.87 கோடியும், 1976-ஆம் ஆண்டில் ரூ. 2.70 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்கு ரூ. 3.51 கோடி கடனாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய தேசியமயமாக்கப்பட்ட எல்லா வங்கிகளும் இந்தத் திட்டத்தில் பங்குபெறுகின்றன. இவை தவிர ஸ்டேட் பாங்க், 'குழு பொறுப்புத் திட்டம்' (Group Guarantee Scheme) என ஒன்றை உருவாக்கி, அதன் மூலம், விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் உதவி அளித்து வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம், கால்நடைகள் வாங்குவதற்கு நாளதுவரை ஏறக்குறைய ரூ. 1.20 கோடி கடனளிக்கப்பட்டிருக்கிறது.

1974 ஆகஸ்ட் முதல் 'குறிக்கோளுடன் கூடிய நிர்வாகம்' (Management by objectives) நவீனமுறைத் திட்டம் ஒன்றை பால்வள நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இது பெரும்பாலும் நடவடிக்கைகளைவிட முடிவுகளையும், உள்ளீடுகளை விட உற்பத்தியையுமே வலியுறுத்துகிறது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் தன்னிடம் உள்ள ஆள், பொருள்கள், பணம் மற்றும் காலம் போன்ற அரிய ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு இந்த வகை நிர்வாகம் உதவியுள்ளது. இந்த நிறுவனத்தின் 160 நிர்வாகிகள், இந்தச் செயல்முறைத் திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவ்வப்போது அவர்களது நிர்வாக முறைகளின் செயல் முறைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

# படமும் செய்தியும்




அண்ணல் காந்தியடிகள் நினைவு நாளை யொட்டி, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் 30-1-1977 அன்று நடைபெற்ற சர்வோதய நாள் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் உரையாற்றினர்.



உப்புத் தண்ணீரில் மீன் பண்ணை நடத்துவது பற்றிய அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை இராஜாஜி அரங்கில் 31-1-1977 அன்று நடைபெற்ற இரண்டாவது செயல்முறைக் கூட்டத்தைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் துவக்கி வைத்தார்.





'மருத்துவக் கல்வியில் சீர்திருத்தம்' என்ற தலைப்பில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அரங்கில், 3-2-1977 அன்று ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார். துவக்க விழாவிற்கு மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் எம். நாராயணன் அவர்கள் தலைமை வகித்தார். அவ்விழாவில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் சிறப்புரையாற்றினர்.



அண்மையில் நடைபெறவிருக்கும் பாராளு மன்றப் பொதுத் தேர்தலையொட்டி மேற் கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களின் மாநாடு, சென்னையில் உள்ள காவல்துறை ஆணையாளர் அலு வலக மாநாட்டு அரங்கில் 3-2-1977 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு ஆளு நரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் அம்மாநாட்டில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்..

முன்னாள் கைதிகள் மறுவாழ்வுத் திட்டத் தின் கீழ், வேலூரில் 9-2-1977 அன்று வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். பரமசிவம் அவர்கள் தலைமையில், மாநில தலைமைக் காவல் துறை அலுவலர் திரு. எஸ். எல். ஸ்ட்ரேசி அவர்கள், முன்னாள் கைதிகளுக்கு வங்கிக் கடன்களை வழங்கினார்.





# குறைந்த விலையில் வீடுகள் கட்டலாம்!

"சொந்தமாக ஒரு வீடு கட்டி, அதில் நிம்மதியாக வாழவேண்டும்!'' என்ற ஆசை, ஆதிகாலம் தொட்டே மனிதர்களிடையே இருந்து வருகிறது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள மனிதர்கள் தங்களிடம் உள்ள வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்ற வகையில் முயற்சித்து வந்துள்ளார்கள். ஆனால் அம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருமே வெற்றி பெற்றார்கள் என்று கூற முடியாது. பலருடைய ஆசை, நிறைவேறாத ஆசையாகவும் ஆகியுள்ளது! ஆயினும் மனித இனம் சொந்த வீடு கட்டும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டே வருகிறது.

இன்றைய நிலையில் சென்னை போன்ற நகரங்களில் குறைந்தது ரூபாய் 20,000 இல்லாமல் வீடு கட்ட முடியாது என்றநிலை உள்ளது. ''ரூபாய் 20,000 செலவு செய்து நம்மால் சொந்த வீடு கட்ட முடியாதே! என்ன செய்வது?'' என்று பலர் ஏங்குகின்றார்கள். அந்த ஏக்கத்தின் காரணமாக, ''குறைந்த செலவில் வீடுகட்ட வழி இல்லையா?'' என்ற கேள்வி பலரின் உள்ளங்களிலே பிறக்கிறது!

''குறைந்த செலவில் வீடுகட்ட வழி இல்லையா?'' என்ற கேள்வி, தனிப்பட்ட மனிதர்களின் உள்ளங்களில் பிறப்பது போலவே, வளர்ந்து வரும் நாடுகளின் அரசாங்கங்களை நடத்திடும் பொறுப்பிலுள்ளோர் உள்ளங்களிலும் பிறந்தது! இக்கேள்விக்கு விடை காணவே, குறைந்த செலவில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்குகள் உலகெங்கும் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

''குறைந்த செலவில் வீடு கட்ட வேண்டும்'' என்ற தனிப்பட்டவர்களின் முயற்சிக்கும், அரசாங்கங்களின் முயற்சிக்கும் எதிராகச் சில முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை மூன்று. அவை:

(1) மக்கள் தொகைப் பெருக்கம்.

(2) வீடுகட்டும் பொருள்களின் பற்றாக்குறை.

(3) பற்றாக்குறை காரணமாக ஏற்படும் விலைவாசி ஏற்றம்.

இம்முட்டுக்கட்டைகளில் மிக மிக முக்கியமானது மக்கள் தொகைப் பெருக்கமே என்றால் மிகையாகாது.

## வளர்ந்து வரும் நாடுகளின் அச்சம்!


மக்கள் தொகை அளவு கடந்து பெருகுவதால், குறிப்பாக நகரங்களில், வீட்டுவசதிப்பற்றாக்குறை கடுமையான அளவில் ஆண்டிற்காண்டு மிகவும் கடுமையாகிக் கொண்டே போகும் என்று அஞ்ச வேண்டிய நிலை இன்று உலகெங்கும் ஏற்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு வாக்கில், வளர்ந்து வரும் நாடுகளின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது ஏறத்தாழ 97.3 கோடி மக்கள்-நகரங்களில் தான் வாழ்வார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2000-ஆம் ஆண்டில், மொத்த மக்கள் தொகையில் 5-ல் 2 பங்கு பேர்கள் நகரங்களில் வாழக்கூடும். அப்போது அந்த மக்களின் எண்ணிக்கை 210 கோடியாக உயர்ந்துவிடும். இம்மக்களில் பெரும் பகுதியினர், வேலைதேடியும், வசதியாக வாழ விரும்பியும் கிராமங்களில் இருந்து குடிபெயர்ந்து நகரங்களுக்கு வந்தவர்களாகவே இருப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2000-ஆம் ஆண்டு வாக்கில், வளர்ந்து வரும் நாடுகளின் நகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகமாகி, வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்துவிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது.

இந்த அச்சத்தின் காரணமாகவே இன்று வளர்ந்து வரும் நாடுகளின் அரசாங்கங்கள், தங்கள் நாட்டு மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையும் தங்களுடைய

தலையாய கடமையாக ஏற்றுக் கொண்டு செயலாற்றி வருகின்றன. அந்தந்த நாடுகளில் உள்ள வசதிகள், கிடைக்கும் மூலப் பொருள்கள் ஆகியவற்றுக்குத் தக்கவாறு ஒவ்வொரு நாட்டிலும் விரிவான தேசிய வீட்டு வசதிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கொள்கையை வரையறுக்க இந்தியாவும் தற்பொழுது முயன்று வருகிறது.

**நகர மக்களின் நிலை**

வளர்ந்து வரும் நாடுகளில் அரசாங்கங்களே, நகர மக்களுக்குக் குறைந்த செலவில் வீடுகட்டிக் கொடுத்தால் கூட, அந்தச் செலவை நகரங்களில் வாழும் ஏழை மக்களால் தாங்க முடியாது என்றநிலை தற்பொழுது உள்ளது. உலகின் பல பகுதிகளில், 6 பெரிய நகரங்களில், உலக பாங்கு நடத்திய ஆராய்ச்சியின் முடிவாக, ஹாங்காங்கில் வாழும் 35 சதமக்களும், பகோடாவில் வாழும் 55 சத மக்களும், ஆமதாபாத்தில் வாழும் 63 சத மக்களும் சென்னையில் வாழும் 64 சத மக்களும், நைரோபியில் வாழும் 65 சத மக்களும் குறைந்த செலவில் கட்டப்படும் வீடுகளுக்கு ஆகும் செலவைத் தாங்க முடியா ஏழைகளாகவே உள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே, ஏழை எளியவர்களும் வாங்குவதற்கு ஏற்றவகையில், குறைந்த செலவில் வீடுகட்டும் வழிகாண, வளர்ந்து வரும் நாடுகள் முயற்சி செய்து வருகின்றன.




இது மலிவு விலை வீடல்ல! மலிவு விலை வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள அலுவலகம்!

**ஐ. நா.வின் மதிப்பீடு**

''ஓரளவே வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் 1000 பேருக்கு 2 முதல் 5 சிறு வீடுகளும், வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் 7 வீடுகளுமே கட்டப்படுகின்றன. அடுத்த 20 அல்லது 30 ஆண்டுகளுக்குள் 1000 பேர்களுக்கு 8 முதல் 10 வீடுகள் வரையாவது கட்டப்படாவிட்டால், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வீட்டு வசதி நிலைமை மோசமாகிவிடும்'' என்று ஐ. நா. நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இக்குறியளவை எய்துவதற்கு வளர்ந்து வரும் நாடுகள் முயற்சித்து வருகின்றன.

சென்னையில் உள்ள கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் கட்டியுள்ள இவ் வீட்டின் விலை ரூபாய் 5,243. இவ்வீடு முதற்பரிசு பெற்றுள்ளது.




**சென்னையில் அனைத்துலகக் கருத்தரங்கு**

அந்த முயற்சியின் விளைவாகவே குறைந்த செலவில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு ஒன்று சென்னை மாநகரில் கடந்த ஜனவரி மாதம் 19-ஆம் நாள் முதல் 22-ஆம் நாள் வரை நடைபெற்றது. அக்கருத்தரங்கு இந்தியாவிலேயே முதன் முறையாகச் சென்னையில்தான் நடைபெற்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மலிவுவிலை வீடுகளை அரசாங்கமே கட்டிக் கொடுத்தாலும், சென்னையில் வாழ்பவர்களில் 64 சதவிகிதத்தினர், அவைகளை விலைக்கு வாங்கிக் கொள்ள முடியாத ஏழைகளாய் இருப்பதால், சென்னையில் குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கை நடத்தியது சென்னை மாநகரின் எதிர்கால வளர்ச்சிக்குச் செய்த அரும்பணி என்று கூறுவதில் தவறில்லை.

சென்னை மாநகரில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் துவக்க



எஃகும், சிமெண்டும் இல்லாமல், செங்கற்களையும் சுண்ணும்பையும் கொண்டு என். ஜி. ஜார்ஜ் அசோசியேட் நிறுவனத்தால் ரூபாய் 5,762 செலவில் கட்டப் பட்டுள்ள இவ்வீடு மூன்றும் பரிசு பெற்றுள்ளது.

விழா தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசுப் பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர் (கட்டடம் மற்றும் பொது), திரு பி. சிவலிங்கம் அவர்கள், அனைத்துலகக் கருத்தரங்கின் துவக்க விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று உரையாற்றினர்.

ஏழை எளியவர்களுக்கு வீடு கட்ட உதவும் இக்கருத்தரங்கை மத்திய பொதுப்பணி மற்றும் வீட்டுவசதி அமைச்சர் திரு ஹிதேந்திர தேசாய் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினர்.

அவர் தமது உரையில் வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையை வலியுறுத்தியதுடன், வீட்டு வசதிக்கான கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்ற வேண்டிய அரும்பணி குறித்துப் பின்கண்டவாறு குறிப்பிட்டார்.


**கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்டுவோம்!**

''சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை, உலகம் தோன்றிய நாள்தொட்டு மனிதர்களிடையே இருந்து வருகிற இந்த ஆசையைத் தூண்டிவிட்டு, கூடுமானவரை வீடு கட்டிக் கொள்ளுவதற்குத் தேவையான பணத்தின் பெரும் பகுதியைச் சம்பந்தப்பட்ட மக்களையே முதலீடு செய்ய வைப்பது என்பது மிகவும் சிறந்தது. இந்த ஏற்பாட்டில் வீட்டு வசதிக்காக கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல பணி புரிய வேண்டும். சில நாடுகளில் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறந்த நிர்வாகிகளின் தலைமையில் இயங்கி, சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் சொந்த வீட்டில் வாழ வேண்டுமென்று கண்ட கனவை நனவாக்கியுள்ளது. கூட்டுறவு முறையில் கட்டப்படும் வீட்டுக்கு, மனையிடம் வாங்குவது, கட்டிடப் பொருட்களை வாங்குவது முதலியன மொத்தமாக நடைபெறுவதால், அவர்கள் கட்டும் வீடு மலிவானதாகவும் இருக்கும். கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி வீடு கட்டும் பணி, அந்தத் துறையில் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமையும்'' என்று குறிப்பிட்டார்.


குறைந்த செலவில், உள்நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே வீடு கட்டிக்கொடுக்க வேண்டிய இன்றியமையாப் பிரச்சினையில் உலகில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும். நிதி உதவி செய்தல், ஆதாரம் மற்றும் மூலதனம் பற்றித் திட்டமிடுதல், அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல், நிருவாகித்தல், கைவினை நுட்பம், கட்டடக்கலை முதலியவை பற்றி விவாதிக்கவும் இக்கருத்தரங்கு வழிவகுத்தது. உருகுவே, கௌடிமலா, ஐக்கிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கென்யா, உகாண்டா, ஈராக், ஈரான், ஸ்ரீலங்கா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, மலேசியா, தாய்லாந்து, நியூசிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்தும் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்தும் வந்த பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் விவாதங்களில் கலந்து கொண்டனர்.

பரிசுபெறுவிட்டாலும், மிகமிகக் குறைந்த செலவில் கட்டப்பட்டுள்ள வீடு என்றபெயர் இவ்வீட்டிற்குக் கிடைத்துள்ளது!

இதைத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது.



விவாதங்கள் பயனுடையதாக இருக்க வேண்டுமென்பதற்காக, இக்கருத்தரங்கு ஒரு புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டது. இக் கருத்தரங்கு நடைபெற்ற 4 நாட்களிலும், இந்தியா மற்றும் அயல் நாடுகளைச் சேர்ந்த திறமைமிகு வல்லுநர்களால் 5 முக்கியச் சொற்பொழிவுகளும், 6 அழைப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் வழங்கப்படவில்லை. இம்முறையினால், விவாதிப்பதற்குப் போதிய நேரம் கிடைத்தது.



கேரள மாநில வீட்டுவசதி வாரியம், ரூபாய் 6,300 செலவில் கட்டியுள்ள இவ்வீட்டிற்கும் மூன்றும் பரிசு கிடைத்துள்ளது.

**கூட்டு முயற்சி**

குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு பின்கண்ட நிறுவனங்களின் கூட்டு முயற்சியினால் நடைபெற்றது:

1. ஐக்கிய நாடுகள்.

2. வீடு கட்டும் அறிவியல் பற்றிய அனைத்துலகச் சங்கம், புளோரிடா.

3. கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையம், சென்னை.

4. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை.

5. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை.

6. தமிழ்நாடுஅரசின் பொதுப் பணித்துறை.

7. தேசிய கட்டட நிறுவனம்.

8. இந்திய அரசின் பணிகள் மற்றும் வீட்டுவசதி அமைச்சகம், புதுடில்லி.

9. இந்தியக் கட்டடம் கட்டுவோர் சங்கத்தின் தென் மையம், சென்னை.

10. மத்தியக்கட்டட ஆராய்ச்சி நிறுவனம், ரூர்க்கி.

11. பொறியியல் கட்டுமான கார்ப்பரேஷன் (E.C.C.)

12. பெங்களூர் மேம்பாட்டு ஆணையகம், பெங்களூர்.

**மலிவு விலையில் மாதிரி வீடுகள்!**

இக்கருத்தரங்கையொட்டி சென்னை கே. கே. நகரில் வீட்டு வசதி வாரியப் பகுதியில் குறைந்த செலவில் 23 மாதிரி வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வீடுகளைப் பின்கண்ட துறையினரும் நிறுவனங்களும், தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கட்டியுள்ளனர்.

1. பொதுப்பணித் துறை, சென்னை.

2. கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம், சென்னை.

3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

4. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.

5. மத்தியக்கட்டட ஆராய்ச்சி நிறுவனம், ரூர்க்கி.

6. டாடா இரும்பு மற்றும் எஃகு கம்பெனி லிமிடெட், ஜாம்ஷட்பூர்.

7. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னலஜி, சென்னை.

8. 'ஷிர்கி-ஷிபோரெக்ஸ் கன்சார்டியம்', பூனா.

9. எஸ். கிருஷ்ண அய்யர், சென்னை.

10. 'மைசூர் லைட் வெயிட்கான்கிரீட் ஒர்க்ஸ்' பத்ராவதி.

11. கேரள மாநில வீட்டு வசதி வாரியம்.

12. நகர மற்றும் தொழில் மேம்பாட்டுக் கார்ப்பரேஷன், பம்பாய்.

13. ஷெல் கான்ஸ், காளிகட்.

14. 'இன்ஜினிரியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்.' சென்னை.

15. 'அட்லாகா அண்ட் அசோசியேட்', புதுடெல்லி.

16. 'என். ஜி. ஜார்ஜ் அண்ட் அசோசியேட்', சென்னை.

17. எம். ஆர். வெங்கட்ராம், சென்னை.

18. 'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் இன்ஜினியரிங் டிசைன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' பெங்களூர்.

19. ஜி. கே. ஷெட்டி அண்ட் எஸ். ஜம்புநாதன், சென்னை.

20. எம். மீரான், சென்னை.

**குறைந்த செலவு வீட்டின் அமைப்பு**

குறைந்த விலையில் வீடு ஒவ்வொன்றும் குறைந்தது 275 சதுர அடி (25 சதுர மீட்டர்) பரப்புடையதாக இருக்க வேண்டும். அதில் படுக்கை அறை, சமையல் அறை, குளிக்கும் அறை, கழிப்பிட அறை முதலியன இருக்க வேண்டும். குடிதண்ணீர்

வசதி, மின்சார வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி முதலிய எல்லா வசதிகளும் இருக்க வேண்டும். வீடு உறுதியாகவும், அழகாகவும், நவீன வசதிகளுடனும் இருக்க வேண்டும். ஆனால் விலையோ ரூபாய் 7000-க்கு மேல் ஆகக் கூடாது. இவ்வாறு கட்டப்படும் வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருள்களிலும், கட்டுமான அமைப்பிலும் சிக்கனத்துக்கான புதுமைகள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு வரைமுறைகளை வகுத்துக் கொண்டே மேற்கூறிய 20 நிறுவனங்களும் 23 மாதிரி வீடுகளைக் கட்டியுள்ளன.

### சிறப்பு அம்சம்


பல புதிய தொழில் நுட்பங்களையும், விலை மலிவான பொருள்களையும் ஒருங்கிணைத்துப் பல நிறுவனங்களும், தனிப்பட்ட கட்டடக் கலைஞர்களும் கட்டியுள்ள 23 மாதிரி வீடுகளின் கண்காட்சி, குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கின் சிறப்பு அம்சமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஒத்துழைப்புடன் இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், குறைந்த செலவில் வீடுகள் கட்ட முடியும் என்பதை விளக்குவதற்கான மாதிரி வீடுகளை அமைப்பதற்குரிய நிலத்தைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அளித்துள்ளது.

மாதிரி வீடுகளின் கட்டட தரைமட்டப் பரப்பின் விலை விகிதம் ( Plinth area rate ) ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 190 முதல் ரூபாய் 356 வரை ஆகியுள்ளது.

### பரிசு பெற்ற வீடுகள்

உயர்மட்ட நடுவர் குழு 23 மாதிரி வீடுகளையும் ஆய்வு செய்து, பின்கண்ட நிறுவனங்களின் மாதிரி வீடுகளுக்குப் பரிசு அளித்துள்ளது:

கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் கட்டியுள்ள 2-வதுமாதிரி வீடு—முதற்பரிசு



தமிழ்நாடு பொதுப்பணித்துறை கட்டியுள்ள மாதிரி வீடு—இரண்டாவது பரிசு.

என்.ஜி. ஜார்ஜ் அசோசியேட் மற்றும் கேரள மாநில வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள மாதிரி வீடுகள் — மூன்றாவது பரிசு.

பரிசு பெற்ற மாதிரி வீடுகளில் பின்பற்றப்பட்டுள்ள அளவுக் குறிப்புகள் ( Specification ) பின்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

## பரிசு பெற்ற வீடுகளின் அளவுக் குறிப்புகள்

| வரிசை எண் | விவரிப்பு | கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சிமையம்கட்டியுள்ள 2வது மாதிரிவீடு | தமிழ் நாடு பொதுப்பணித்துறையின் மாதிரி வீடு | என்.ஜி.ஜார்ஜ் & அசோசியேட்ஸின் மாதிரி வீடு | கேரள மாநில வீட்டு வசதிவாரிய மாதிரி வீடு |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டட தரைமட்டப் பரப்பு (சதுர மீட்டரில்) | 25.70 | 23.85 | 25.84 | 27.36 |
| 2. | தரைப் பரப்பு (தரை சதுர மீட்டரில்) | 21.80 | 19.46 | 21.80 | 22.50 |
| 3. | கடைக்கால் | துளைஊசி நெடுமுனை கடைக்கால் *(Auger Pile Foundation)* | 'அண்டர் ரீயாம்டு' நெடுமுனைக் கடைக்கால். | செங்கல் ஜல்லி சுண்ணாம்பு கான்கிரீட் அடிப்பகுதி. | மணல் நிரப்பி அதன் மேல் 10 செ. மீ. கனமுள்ள செங்கல் ஜல்லி கான்கிரீட். கட்டட விட்டம் தரை மட்ட அளவில் |
| 4. | சுவர் அமைப்பு | 20 செ. மீ. கனமுள்ள "லாட்டோ பிளாக்" சுவர். சிமெண்ட் கலவை 1:6 | 10 செ. மீ. செங்கல் சுவர் சுண்ணாம்புக் கலவை. | 23 செ. மீ. செங்கல் தூண்கள்,செங்கல்லால் கட்டப்பட்ட வளைவுகள், 11 செ. மீ. அடைப்புப்பலகை, சுவர். | 20 செ. மீ.கனமுள்ள செங்கற் சுவர். |
| 5. | கூரை அமைப்பு | 7.5 செ. மீ. கனமுள்ள "லாட்டோ பிளாக்" ஓடு. சிமெண்ட் கலவை 1:5 | வலுவேற்றப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் செங்கல் நிரப்பப்பட்ட பாளம் | 23 செ. மீ. செங்கல் 2 வளைவின் மேலே, அரை வட்ட வளைவுகள் சிமெண்ட் கலவையால் (1:4) காரை பூசப்பட்டுள்ளது | முன் கூட்டியே செய்து வலுவூட்டப்பெற்ற செங்கல் அடைசுப் பலகை. |

கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் சரளைக் கற்களை அழுத்தி, கற்களாக அறுத்து, அக்கற்களைக்கொண்டே குறைந்த செலவில் மாதிரி வீடு கட்டியுள்ளது. இவ்வீடு கட்டுவதற்கு ஆகியுள்ள செலவு ரூபாய் 5,243, இவ்வீட்டிற்கே முதற்பரிசு கிடைத்துள்ளது.

குறைந்த செலவில் வீடு கட்டுவதில் மூன்ருவது பரிசு பெற்ற என். ஜி. ஜார்ஜ் அசோசியேட் நிறுவனம் எஃகு, சிமெண்ட் இல்லாமல் செங்கற்களையும் சுண்ணும்பையும் கொண்டே வளைவுகள் அமைத்து வீடு கட்டியுள்ளது. இவ்வீட்டின் விலை ரூபாய். 5,762.

மற்ருெரு மூன்ருவது பரிசு பெற்ற கேரள மாநில வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள குறைந்த விலை வீட்டின் விலை ரூபாய், 6,300.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ள வீடே, 23 வீடுகளில் மிகவும் குறைந்த செலவில் கட்டப்பட்டதாகும். இதன் விலை ரூபாய், 4,548 தான்.

குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு, சென்னையில் நடைபெற்றதால், சென்னை நகரில் மட்டுமல்ல தமிழகமெங்கிலும் —பட்டி தொட்டிகளிலும் கூட — ஏறத்தாழ ரூ. 4,500 முதல் ரூ. 8,500க்குள் நல்ல தரமான வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும் என்பது தெளிவாகியுள்ளது. எனவே, ''குறைந்த செலவில் வீடு கட்டிக் கொண்டு அதில் நிம்மதியாக வாழ வேண்டும்! என்று, எண்ணியவர்களின் ஆசை நிறைவேறப் போகிறது'' என்பதில் ஐயமில்லை.

## ஜனநாயகம்

ஜனநாயகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிருேம். எல்லா மக்களுக்கும், ஜனநாயகம் அர்த்தம் உள்ளதாக இருக்க அதை நாம் மாற்ற விரும்புகிருேம். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வாக்குப்பதிவு செய்வது மட்டுமே ஜனநாயகமாகிவிடாது. சாதாரண மனிதன் தனது பகுதி அபிவிருத்தி சம்பந்தமாக எழுப்பப்படும் விஷயங்கள் வெளிப்படவேண்டும் என நாம் கருதுகிருேம். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவே முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நமது நாடாளுமன்ற முறைதான் இந்தியாவுக்குச் சரியானது என நாம் கருதுகிருேம். அதில் சில திருத்தங்கள் தேவைப்படலாம். ஆனுல் மொத்தத்தில் அதுதான் சரியானது.

சித்தாந்த ரீதியில் ஒருவரிடம் அதிக அளவுக்கு அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை நடைமுறையில் சுலபமாகப் பயன்படுத்திவிட முடியாது. அவற்றைப் பயன்படுத்த முதலமைச்சர்களின் உதவி தேவைப்படுகின்றது. மாநில முதலமைச்சர்கள் தங்கள் மாநிலங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவர்களால் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது. மக்களின் ஆதரவு கிடைக்காவிட்டால் எனது கட்சிக்கு நான் தேவைப்பட மாட்டேன். கட்சிக்கு நான் தேவையில்லாவிட்டால், நான் கட்சியில் இருக்கமுடியாது. ஆகையால் ஒவ்வொரு செயலும் மற்ருெரு செயலைச் சார்ந்து இருக்கின்றது. ஆகையால் இந்தியா, ஜனநாயக முறையில்தான் வளமடைந்து சிறக்க முடியும்!

—இந்திரா காந்தி.

# தமிழ்நாட்டில் இரத்தினக்கற்கள்

தமிழ்நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாகத் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரத்தினக் கற்கள் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்தினக் கற்களில் அபூர்வமான விலை உயர்ந்த கற்களின் துண்டுச் சிதறல்கள் குறிப்பாக மழைக் காலத்திற்குப் பின்னர் - திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தின் சில பகுதிகள், கோயம்புத்தூர் மாவட்டம் காங்கேயம் வட்டத்தின் சில பகுதிகளில் இருந்து விவசாயிகளாலும், கிராம மக்களாலும் எடுக்கப்படுகின்றன. இவ்வகைக் கற்களில் சில பம்பாய், ஜெய்ப்பூர் மற்றும் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டு, அங்கு அவை பட்டை தீட்டப்பட்டு விற்கப்படுவதாகத் தெரிகிறது. இந்திய மண்வள அளவைத் துறையும், தொழில் துறையின் மண்வளப் பிரிவும் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து இவ்வகைக் கற்கள் அங்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு உறுதியாகிறது. ஆனால், கிடைக்கும் கற்களின் அளவும், கிடைக்கக்கூடிய கால இடைவெளியும் மிகக் குறைவாக இருப்பதால் வியாபார ரீதியாக பெரும் தொழில்கள் செய்ய ஏதுவாயில்லை.

திருச்சி மாவட்டத்தில் சக்கரக்கோட்டை, ஓடையபட்டி, தென்னிலை, மனவாடி, உட்பிடமங்கலம் ஆகிய இடங்களிலும், கோவை மாவட்டத்தில் பழைய கோட்டை, மல்லிபுரம், காவலகட்டுவலசு, பாப்பினி, வஞ்சிபாளையம், வேங்கைபாளையம், கவுண்டன்பாளையம், நெலாளி, தாயம்பாளையம் உடையார், அப்பிபாளையம் ஆகிய இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் அருகில் உள்ள கணியம்பட்டி, தாரமங்கலம் அருகில் உள்ள ஸ்ரீரங்கனூர், திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள பாமன்டபாளையம், சிட்டாம்பூண்டி ஆகிய இடங்களிலும் மரகதம், கடல்நீலம், கோமேதகம், சந்திரக்கல் மாணிக்கம் போன்ற ரத்தினக் கற்கள் கிடைக்கின்றன.

இந்த இரத்தினக் கற்களை இப்பகுதிகளில் இருந்து விஞ்ஞான முறையில் தோண்டி எடுக்கவும், இத்தொழிலை ஒழுங்குபடுத்தவும் அரசு விரும்புகிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் இத்தொழிலை நடத்தவிரும்பினால் சுரங்கம் தோண்டி எடுப்பதற்கான குத்தகை விடுவதற்கும், பட்டை தீட்டும் தொழில் அமைக்கவும், மற்றும் உதவிகள் செய்யவும் அரசு ஆவன செய்யும்.

விருப்பம் உள்ளவர்கள் சுரங்கக் குத்தகைக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




# இலவச உழைப்பு முகாம்!



மதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் அவர்களும் மற்றும் தமிழக ஆளுநர் அவர்களும் அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் ஆகியோர் தங்கள் ஓய்வு நேரத்தில், தேசிய சமூக சேவா தொண்டர்கள், கிராமப்புற மக்கள் ஆகியோருடன், ஒருங்கிணைந்து. இலவச உழைப்புதானம் செய்து நாட்டிற்கு நலம் பயக்கும் பணிகளைச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், தேசிய சமூக சேவா தொண்டர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிராமப் பொது மக்கள் முதலிய 2,000 நபர்களின் ஒருங்கிணைந்த சக்தியினால் இராம நாதபுரம் மாவட்டம், சிவகாசி கோட்டத்தில் ஓர் நற்பணி நடைபெற்றுள்ளது. ஆம். இலவச உழைப்பு முகாம் ஏற்படுத்தியதன் பயனாக சிவகாசி கோட்டம், செங்கமலப்பட்டி என்ற







குக்கிராமத்தில் கசிவுநீர்க் குட்டை (Percolation Pond) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கசிவுநீர்க் குட்டை அமைப்பது பொதுவாக மண்ணின் ஈரத்தன்மையைப் பலப்படுத்தவே. இக்குட்டையின் மூலம் 3,000 மீட்டர் சுற்றளவுக்கு நீர்ப்பாசனக் கிணறுகளின் நீர்வளம் போதுமானதாக இருக்கும். கிணற்று நீரே முக்கிய பாசன ஆதாரமாக உள்ள இடங்களில், மறைமுகமாக நீர்ப்பாசன வளத்தைப் பெருக்குவதற்கு கசிவுநீர்க் குட்டை மிகவும் ஏற்றதாகும்.


கீழ்த்திருத்தங்கல் பெரிய கண்மாய்க்குத் தண்ணீர் செல்லும் தாவோடையின் குறுக்கே இக் குட்டை அமைக்கப்படுகிறது. கீழத்திருத்தங்கல் பெரிய கண்மாயின் அதிகப்படியான தண்ணீர் அர்ச்சுனு நதியில் விழுந்து வீணுகிறது. இக்குட்டையின் மொத்தம் கொள்ளளவு 11,000 கன மீட்டர். 29 நீர்ப்பாசனக் கிணறுகள் இக்குட்டையினுல் பயன்பெறும். இதனுல் பெரும்பான்மையான சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகள் பயனடைவார்கள். இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் ரூ. 20,000 வரை விவசாய உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்




படுகிறது. இத் தேக்கத் தண்ணீர், கால்நடைகளுக்கும் மற்றும் இதர உபயோகத்திற்கும் பயன்படும். மேலும் கண்மாய்களில் மண் மேடிட்டுப் போவதைத் தடுக்க முடிவதோடு இக் குட்டையில் குவியும் வண்டல் மண்ணும் விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலும்.

2,000 மனித உழைப்பு நாட்களில் முடிவு பெறும் இவ்வேலையின் மதிப்பு ரூ. 11,500 ஆகும். இது இலவச உழைப்பு மூலமாகவே உண்டாக்கப்பட்ட நிரந்தர-பயன்தரத்தக்க ஒரு சொத்தாகும்.

இது போன்ற வேலைகள் நமது மாநிலத்தில் 1957-க்குப் பிறகு நடைபெறுவது இதுதான் முதலாவதாகும் என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற இலவசப் பணி முகாம்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இனி தொடர்ந்து நடைபெறும் என நம்புவதற்கு இது முதற்படியாக அமைந்துள்ளது.







# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*


| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# கால்நடைகளை மேம்படுத்துவதற்கான இனச்சேர்க்கை வழி முறைகள்

—டாக்டர் பூவை. கோதண்டராமன்,
பேராசிரியர்,
கோழியின அறிவியல் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

மனிதன் வன விலங்குகளைத்தன் சொந்தத்தேவைக்காக வீட்டினங்களாக மாற்றியமைத்த காலத்திலின்று, இனவிருத்திக்கான பழக்கங்களும், செயல்முறைகளும் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கின்றன. இம்முன்னேற்றம் சில சமயங்களில் பின் தங்கியதாகவும், நிச்சயமற்றதாகவும் இருந்து வந்தது. ஆனால் இன்றைய இன விருத்திக்கான தெளிவான முறைகள், தொடர்ச்சியாய்க் கண்டுபிடிக்கப் பட்டவைகளையும், படிப்பினைகளையும் சார்ந்ததாகும்.

**மரபுக்கூறும் சூழ்நிலையும்**

ஒரு பிராணியினுடைய நிறம், பருமன், தோற்றம் மற்றும் அதனுடைய உற்பத்தித் திறன் ஆகியவை இரண்டு முக்கிய காரணங்களினால் வரையறுக்கப்படுகிறது. முதலாவதாக இத்தன்மைகள் வழிமுறை உரிமையாகவும். இரண்டாவதாக சூழ்நிலையினால் உருப்பெருவதும், திணிக்கப்படுவதாகவும் உள்ளது. இனச்சேர்க்கையினால் சந்ததி இத்தகையதாகவிருக்கும் என்பதை நிர்ணயிப்பதில் சூழ்நிலை பெரும்பங்கு கொள்கிறது. ஆனால் வழிமுறை உரிமையின் பங்கும் நிச்சயமாக இனச்சேர்க்கையின் பயனை பிரதிபலிக்கிறது.

**வேறுபாடு : (Variation)**

பேதங்கள் வெகுவாக இல்லையெனினும், எந்த ஒரு பிராணியும் மற்றதொரு பிராணியைப் போல் ஒருமிக்க இருப்பதில்லை. மரபியல் நிபுணர்கள் இந்த வேறுபாட்டை ''வேரியேஷன்'' எனக் கூறுவர். இவ்வேறுபாடே இனவிருத்திக்கு அடிப்படையாகும். தேர்ந்தெடுத்தல் என்பது அடுத்த சந்ததியின் கூற்றை நிர்ணயிக்கும், தாய் தந்தை வம்சத்தை அவற்றின் வேறுபாட்டின் அடிப்படையில் பிரித்தெடுத்து இனச்சேர்க்கை செய்தலேயாகும். திறம்படத் தேர்ந்தெடுத்தலே, இனவிருத்திக்கு அஸ்திவாரமாகவும், பயன்மிகு திருப்பமாகவும் அமைகின்றது. தொடர்ந்த உள் இனக்கலப்பினால் ஏற்படும் குண மாற்றம் அகன்று வேறுபாடு இல்லாத நிலையை அடைந்துவிட்டால் மேலும் இனவிருத்தி செய்ய முற்

படின், பிறிதொரு உறவு முறை அற்ற, நல்லதொரு பிராணியுடன் இனச் சேர்க்கையின் வாயிலாக மீண்டும் வேறுபாட்டை ஏற்படுத்தலாம்.

**பயன்மிகு தேர்ந்தெடுத்தல் (Effective Selection)**

பயன்மிகு தேர்ந்தெடுத்தல் என்பதாவது கீழே குறிப்பிட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் அமைவதாகும்.

(1) ஒரு பிராணியின் தனித்தன்மை, தோற்றம் மற்றும் உற்பத்தித் திறன்.

(2) மூதாதையரின் உற்பத்தித் திறன்.

(3) குடும்பச் சார்பான உற்பத்தித் திறன்.


(4) அப்பிராணியின் ஈனும் தன்மை.

(5) சந்ததியின் தன்மை.

கடைசியாக கூறியுள்ள இரண்டும் முக்கியத்துவம் பெற்றவை. ஆனால் இதற்கான ஆதாரம் உடனடியாக கிடைக்கக் கூடியதல்ல. தேர்ந்தெடுத்தல் தொடர்ந்தும் தொடர்ச்சியாகவும் இருத்தல் அவசியம். முதலாவதாக, ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய சான்றுகளைக் கொண்டு தேர்ந்தெடுத்தல் வேண்டும். நான்காவது சான்று கிட்டியவுடன் மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஐந்தாவது சான்றை பயன்படுத்தி முடிவான தேர்வை நிர்ணயித்தல் வேண்டும்

**மரபுரிமையாகப் பெறும் உற்பத்தித் திறன்: (Production inheritance)**

முட்டை, இறைச்சி, பால் முதலானவற்றிற்கான உற்பத்தித் தன்மைகள் சிக்கலுள்ளதாகவும் பற்பல மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களால் (Genes) கட்டுப்படுத்தப்படுகிறது. அதிகப்படியான முட்டையிடும் திறன் பல நூற்றுக்கணக்கான இரட்டிப்பான மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்கள் சேர்க்கைப் பாதிப்பால் ஏற்படுவதாகும். குறைந்த கால வரையறைக்குள் முட்டையிடும் பருவமெய்துதல், அடுத்தடுத்து முட்டையிடும் தன்மை, நீண்டகாலம் அடுத்தடுத்து முட்டையிடும் தன்மை, அவயம் காக்காத நிலை முதலான தன்மைகள் எவ்வாறுள்ளதோ, அதைப் பொறுத்தே ஒரு கோழியின் முட்டையிடும் திறன். கால்நடை



சிந்திக் காளை

அபிவிருத்திக்கு, உடனடியாக உள்ள கால்நடைகளைக் கொண்டே ஆரம்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பிராணியும் சில நன்மை பயக்கும் மற்றும் சில தீமைபயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை பெற்றிருக்கிறது. இன அபிவிருத்தியாளர் (1) நன்மை பயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை கூட்டியும், தீமை பயப்பவற்றை குறைத்தும் (2) நல்லதொரு பயனைத்தரும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை ஒரு சேரச் செய்தலின் மூலமும் அபிவிருத்தியைக் காணலாம். பிராணிகளுடைய பாரம்பரியத்தை விருத்தி செய்ய, இனவிருத்தி செயல் முறைகளையும் மற்றும் தேர்வுமுறைகளையும் கருவிகளாக கொள்ளல் வேண்டும்.

**பழக்கத்திலுள்ள இனவிருத்திக்கான செயல்முறைகள்**

(1) 'க்ரிஸ் க்ராஸிங்' (Criss crossing)

வருடா வருடம் பிறிதொரு இனத்தைச் சேர்ந்த ஆணை முந்தைய வருடங்களின் கலப்பினச் சேர்க்கையினால் ஏற்பட்ட பெண் இனத்துடன் சேர்த்தலாகும்.

(2) 'க்ராஸ் ப்ரிடிங்' (Cross breeding)

வெவ்வேறு இனங்களைக் கொண்டு ஒன்று சேர்த்து இனக் கலப்பு செய்யும் முறை.


(3) 'ஹைப்ரிட்' (Hybrid)


இரண்டு வேறு இனங்களை ஒன்று சேர்த்து புதியதாக வரும் சந்ததியினை 'ஹைப்ரிட்' அல்லது வீரிய இனம் என்பர். ஆனால் தற்பொழுதுள்ள இனக்கலப்பு வம்சங்கள் ஒன்று சேர்த்தலை வீரியகலப்பு எனக் கூறுகின்றனர்.

(4) 'இன்பிரிடிங்' (Inbreeding)

நெருங்கிய உறவு கொண்ட பிராணிகளை ஒன்று சேர்த்தல் உள் இனக்கலப்பு எனப்படும்.

தாயும் கன்றும்





தாயும் கன்றும்

*(5)* **'இன் க்ராஸிங்'** (In crossing)

உள் இனக்கலப்பினால் ஏற்பட்ட இரண்டு வம்சங்களையோ அல்லது இனங்களையோ ஒன்று சேர்த்தலாகும்.

*(6)* **'லைன் ப்ரீடிங்'** (Line breeding)

நெருங்கிய உறவில்லாத பிராணிகளை ஒன்று சேர்த்தல்.

*(7)* **'அவுட் பிரிடிங்'**: ( Out breeding )

உறவு முறையற்ற ஒரே இனத்தைச் சார்ந்த பிராணிகளை ஒன்று சேர்த்தல்.

*(8)* **'ப்ராஜினி டெஸ்டிங்'**: ( Progeny Testing )

சந்ததியின் திறனைக் கொண்டு கையாண்ட இனச்சேர்க்கையை மதிப்பிடுதல்.

*(9)* **'ரெஸிப்ரோக்கல் க்ராஸ்'**: ( Reciprocal cross )

இரு இனங்களுக்குள்ளோ அல்லது வம்சங்களுக்குள்ளோ இனச்சேர்க்கைக்காக முதலில் ஒரு இன ஆணையும் அதற்கடுத்தாற்போல் மற்றொரு இன ஆணையும் உபயோகித்தல்.

*(10)* **'ரெஸிப்ரோக்கல் ரெக்கரண்ட் செலக்ஷன்'** (Reciprocal Recurrent Selection)

இம்முறையில் இரண்டு இனத்தைக் கலந்து இனவிருத்தி செய்து அவ்வம்சத் திறனைக் கொண்டு முதலிரண்டு இனத்தின் தன்மையை நிர்ணயித்து, அவைகளைத் தனி வம்சமாக உற்பத்தி செய்தல்.

*(11)* **'அப்க்ரேடிங்'** (Up grading)

ஒரு வம்சத்தின் திறனை உயர்த்த மற்றொரு வம்சத்தை சேர்ந்த ஆணினக் கலப்பு 'அப்கிரேடிங்' எனப்படும்.

*(12)* **'குளோஸ்டு ப்ளாக்'**: (Closed flock) ஒரு மந்தையிலுள்ள பிராணிகளை அவற்றிற்குள்ளேயே தொடர்ந்து இனச்சேர்க்கையைக் கையாண்டு பிறிதொரு பிராணிகளின் சேர்க்கையே இல்லாமல் தவிர்ப்பது 'குளோஸ்டு பிளாக்' எனப்படும்.

**பழக்கத்திலுள்ள தேர்வு முறைகள்:**

தனிப்பட்ட பிராணியின் வெளிப்படைத் தோற்றம், உற்பத்தித் திறன், இவை இரண்டும் கலந்தது மற்றும் மூதாதையர், சந்ததி முதலான திறன்களை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்தலை ஆதாரமாகக் கொண்டுள்ளது.


**இனச்சேர்க்கைக்கான இனத்தையோ இனங்களையோ தெரிந்து எடுத்தல்:**

எளிதில் கிடைக்கும் வாய்ப்பு, உற்பத்தியின் நோக்கம், தட்பவெப்ப நிலை மற்றும் நோய் நொடி நிலைமைகளைப் பொறுத்து இனமோ இனங்களையோ தெரிந்து எடுத்தல் அவசியம். அதற்குத் தகுந்தாற்போல் நாட்டு அல்லது அயல்நாட்டு இனங்களை, ஓரினச் சேர்க்கைக்காகவும் (Pure breeding) தரப்படுத்துதலுக்காகவும் ( Grading ), கலப்பினச் சேர்க்கைக்காகவும் (Cross breeding) இனங்களைத் தெரிந்து எடுக்கலாம். பால், விற்பனைப் பொருளாயின் இனச்சேர்க்கையைக் கையாளும்போது, ஹால்ஸ்டெய்ன் ( Holstein ) காளையையும், தயிர், வெண்ணெய், நெய் விற்பனைப் பொருளாயின் ஜெர்ஸி ( Jersy ) காளையையும் இனச்சேர்க்கைக்கு உபயோகப்படுத்தலாம். மேலும் தட்பவெப்ப மற்றும் பராமரிப்பு வித்தியாசங்களுக்கு உகந்தவாறு, வேறு அயல் நாட்டினங்களைப் பயன்படுத்தலாம். ஓரினச் சேர்க்கைக்கும், தரப்படுத்துதலுக்கும் இதே சிந்தனைகள் பயனளிக்கும்.

**பிராணிகளின் தரம் உயர்த்துவதற்கான இனச் சேர்க்கை முறைகள்**

பிராணிகளின் தரம் உயர்த்துவதற்கான இனச்சேர்க்கை முறைகள், பசு, எருமை, கோழி முதலானவற்றின் அடிப்படை அமைப்பும், சேர்மானமும் ( Structure and composition ) எவ்வாறு உள்ளது என்பதனை மிகப் பெருத்த அளவில் சார்ந்திருக்கின்றது.

**பசுக்கள்:** நாட்டிலுள்ள பசுக்களைப் பார்க்கும்போது நம் நாட்டினத்தைச் சேர்ந்த சாஹிவால், சிந்தி, தார்ப்பார்க்கர், கிர் எனப்படும் இனத்தைச் சார்ந்த ஆங்காங்கே உள்ள ஒரு சில மந்தைகளைத் தவிர, மிகப் பெருத்த அளவில் நம்முடைய கறவைப் பசுக்கள் எந்த ஒரு இனத்திற்கும்



ஜெர்சி காளை



உட்படாதவைகளாகவும், நகரப புறங்களிலும், பால் உற்பத்தி வட்டாரங்களிலும் ஒரு சில கலப்பின பசுக்களும்தான் இருக்கிறது.

உயர்ரக நாட்டின அல்லது அயலின ஆண் வம்சத்தைக் கொண்டு நம் நாட்டுப் பசுக்களைத் தரப்படுத்துதல் மிகவும் பயன் தரக் கூடியதாக அமையும்.

நம் நாட்டின் பசுக்களை நம் நாட்டு அல்லது அயல் நாட்டு உயர்ரகக் காளைகளுடன் சேர்த்து உற்பத்தி திறனை பெருக்குவதுடன் அவற்றின் நோயைத் தவிர்க்கும் தன்மை மற்றும் தட்ப வெப்ப நிலையைச்சமாளிக்கும் தன்மையையும் கூட்ட வேண்டும். மேற்கண்ட நன்மைகளைப் பெற அயல் நாட்டின் இரத்த பங்கு (Blood level) போதிய அளவில் கலந்திருக்க வேண்டும். இந்தியாவிலும் மற்ற நாட்டிலுமுள்ள பாரம்பரிய நிபுணர்கள் $\frac{1}{2}$ அல்லது 5/8 பாகம் அயல் நாட்டின் இரத்த அளவு இருத்தல் நலமென அறிவுரை கூறியுள்ளனர். இந்த இரத்த அளவைப் பெற, முதல் கலப்பினுல் (ஜெர்ஸி காளை × சிந்தி பசு) ஏற்படும் கிடேரிக் கன்றின் ($\frac{1}{2} + \frac{1}{2}$ பாகம்) இரத்த அளவு சரிபாதியாகவிருக்கும். இந்த முதல் வம்சக் கலப்பின கன்றுகளை ஜெர்ஸி காளையுடன் சேர்ப்பதனுல் 3/4 பங்கு அயல் நாட்டின இரத்தக் கலப்பு ஏற்படுகிறது. இந்த இரண்டாவது வம்ச கலப்பினக் கன்றுகளை $\frac{1}{2}$ பங்கு ஜெர்ஸி சிந்தி இரத்தக் கலப்புள்ள காளையுடன் சேர்க்கும்போது 5/8 பங்கு இரத்தக் கலப்புடைய ஜெர் சிந்தி கிடேரி கன்று உற்பத்தியாகிறது.

**ஜெர்ஸி காளை × சிந்தி பசு**

↓

**முதல்வம்ச கிடேரி கன்றுகள் × ஜெர்ஸி காளை**

($\frac{1}{2}+\frac{1}{2}$) ↓

**இரண்டாம் வம்ச கிடேரி கன்றுகள் ×**

**ஜெர்சிந்திக் காளை**

($\frac{3}{4}+\frac{1}{4}$) ↓ ($\frac{1}{2}+\frac{1}{2}$)

**மூன்றும் வம்ச கிடேரி கன்றுகள் (5/8+3/8)**


ஓரினச் சேர்க்கையின் மூலம் சாகிவால், சிந்தி, தார்பார்க்கர், கிர் மந்தைகளை தனிப்பட்ட மந்தைகளாக அமைத்து, அவற்றினுள்ளேயே பொறுக்கி தேர்ந்தெடுத்தல் (Selective breeding) முறையில் நன்மை பயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, பால் உற்பத்தியைப் பெருக்கலாம்.

**எருமைகள் :**

இங்கொன்றும் அங்கொன்றுமாக அமைந்துள்ள முர்ரா, சுர்ட்டி, ஜபர்பாடி என்ற ஓரின மந்தைகளைத் தவிர, மிகப் பெருத்த அளவில் இந்த இனத்தை சார்ந்தது என்று கூற இயலாத எருமை வகை தான் அதிகமாக உள்ளது.

ஓரின மந்தைகளில் பொறுக்கி தேர்ந்தெடுத்தல் மூலமும் மற்றும் இனபாகுபாடற்ற மந்தைகளில், முர்ரா காளைகளைக் கொண்டு,தரப் படுத்துவதினுலும் எருமைகளின் பால் கறக்கும் தன்மையை உயர்த்தலாம்.

**கோழிகள் :** நம் நாட்டின் கோழிகள் மிகப் பெருத்த அளவில் நாட்டினங்களாகவும், இன்ன இனமென பிரிக்க இயலாத கோழிகளுமே அதிகப்படியுள்ளன. இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் 8 வருடங்களாக நிகழ்ந்த ஆராய்ச்சியில், நாட்டினக் கோழியின் 116 முட்டை எண்ணிக்கையை 140 ஆகவும், 39 கிராம் முட்டை எடையை 48 கிராம் எடையாகவும் மாற்றியமைக்க பொறுக்குத் தேர்ந்தெடுத்தல் பயனளித்தது.



வெள்ளை 'லெக்ஹார்ன்' இனத்தைச் சேர்ந்த சேவல்களைக் கொண்டு நாட்டினக் கோழிகளின் தன்மையை வெகுவாக மாற்றியமைக்கலாம்.

நாட்டிலுள்ள ஒயிட்லெக்ஹார்ன், ரோட் ஐலொண்டு ரெட், ஆஸ்டர்லார்ப், ஒயிட் கார்னிஷ், ஒயிட் ராக், நியு ஹாம்ஷையர், ஓரினக் கோழி (Pure breed) மந்தைகளைத் தனிப்பட்ட முறையில் விருத்தி செய்து வம்சங்களை உண்டு பண்ணி (Strain) அவ் வம்சங்களின் மூலம் வீர்ய குஞ்சுகளையும் (Strain Crosses or Hybrids) உண்டாக்கி முட்டை மற்றும் இறைச்சி பெறுவதற்கான வாய்ப்புகளை மிகப் பெருத்த அளவில் மாற்றியமைக்கலாம்.

வேற்று நாட்டினர் வியாபாரத் திற்காக வீரியக் கலப்புக் குஞ்சுகளை நம் நாட்டில் விற்பனை செய்கிருர்கள். ஒவ்வொரு முறையும் முட்டை அல்லது இறைச்சி உற்பத்தி செய்வதற்கு இக்குஞ்சுகளை வாங்க வேண்டிய நிலை இன்று உள்ளது. இதற்காகும் செலாவணித் தொகையைக் கணிசமான அளவிற்குக் குறைப்பதற்கு திட்டமிட்ட இன அபிவிருத்தி மூலம் ஏற்கனவே நாட்டிலுள்ள இனங்களை விருத்தி செய்தல் மெத்த அவசியம்.

மேலே கண்டுள்ளபடி கால்நடை அபிவிருத்தி, இன அபிவிருத்தியையும், மேலும் மந்தை அபிவிருத்தியையும் சார்ந்ததாகும். முன்னது நீண்டகாலத் திட்டமாகும். பிந்தியது குறுகிய காலத் திட்டமாகும். இரண்டும் ஒருங்கே செயல்படுத்துவதின் மூலம் இன அபிவிருத்திக்கான வழிமுறைகள் நல்லபடி அமைவதற்குச் சிரிய வாய்ப்பு ஏற்படுகிறது. நம்நாட்டிலுள்ள கால்நடைகள் "Stratification" எனப்படும் அடுக்கு நிலையாய் அமைந்துள்ள கால்நடை வளர்ச்சியைப்பின்பற்றியதாக இருத்தல் வேண்டும். இதன் மூலம் மிக நல்லது, நல்லது, சுமாரானது என்றபடிக்குப் பலதரப்பட்ட மந்தைகளைக் கொண்ட கால்நடைச் செல்வத்தைப் பெறலாம். இன்றுள்ள மிகச் சில நல்லவையை விட்டால் மற்றவை அதிகப்பயன் படாதது என்ற நிலைமை வெகுவாக மாறிவிடும். இப்பொழுதுள்ள உற்பத்தித்திறன் குறைவை மாற்றி, தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிட்ட கால்நடை இனவிருத்தியை ஏற்படுத்துதல் மெத்த அவசியமாகும்.

# கண்கவர் தோல்பொருள் உற்பத்தியில் கணிசமான வெற்றி!



நமது நாட்டில், தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியை அதிகரிக்கவும், விரிவுபடுத்தவும், அவற்றின் தரத்தை உயர்த்தவும் 52 ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**வேலைவாய்ப்பு**

இவற்றில் 39 திட்டங்களுக்கு 2 கோடியே 54 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வெளிச் செலாவணி 43 இலட்ச ரூபாயும் அடங்கும். மீதமுள்ள 13 திட்டங்கள் நிதியுதவி கோரவில்லை. இத்திட்டங்கள் மூலம் 5 ஆண்டுகளில் சுமார் 200 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

காலணிகள், தோல்பொருட்கள் இவை சராசரி மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களாகும். நமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தோல் பொருட்களின், குறிப்பாக ஓரளவு பதப்படுத்தப்பட்ட தோலின் ஏற்றுமதியின் பங்கு ஆண்டுக்கு 200 கோடி ரூபாயாகும். எனவே, தோல் பொருட்களின் தரம், நீடித்த தன்மை, உள்நாட்டு, ஏற்றுமதிக்கான நல்ல விலை இவற்றின் அவசியம் பற்றி நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தது.

**கணிசமான வெற்றி!**

நாட்டிலுள்ள ஆராய்ச்சி, வளர்ச்சி நடவடிக்கைகள், தோல் பொருள் தொழிலை வளரச் செய்வதில் கணிசமான வெற்றியடைந்துள்ளது. இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட தோல்பொருட்கள், காலணிகள், தோல் தயாரிப்புகள் இவற்றின் ஏற்றுமதி அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முதலிடம் வகிக்கிறது!**

இப்பணியில், சென்னையிலுள்ள விஞ்ஞானத் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. தோல் பொருட்கள் பற்றிய 52 ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

**மூவகைப் பிரிவுகள்**

தோல் தொழிலில் குறிப்பிடத்தக்க மூன்று துணைப்பிரிவுகள் உள்ளன அவை:

(1) தோலைப் பதப்படுத்துதல், பூர்த்தி செய்தல்.

(2) காலணிகள் தயாரித்தல்

(3) இதர தோல் பொருட்களைத் தயாரித்தல்.


கிராமப்புறங்களில் தோல்பதனிடுதல், விஞ்ஞான ரீதியில் இல்லாமலும் சிக்கனமின்றியும் செய்யப்படுவதால் பதப்படுத்தப்பட்ட தோலின் மதிப்பு குறைகிறது. தோல் காலணிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தோல் தரக்குறைவானதாகவும், ஒரே ரகமாகவும் உள்ளன. இதனால் இவற்றின் விற்பனையளவும் கணிசமாகப் பாதிக்கப்படுகிறது.

**வருமானம் அதிகரிக்க!**

ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கிராமங்களில் தோல் பொருள்கள் தயாரிப்பில் பொருள் விரயமாவதைக் குறைக்கவும், அதன் மூலம் சம்பந்தப்பட்ட கைவினைஞர்கள் வருமானத்தையும் அதிகரிக்கவும் முடியும்.

தற்போது பரிசீலிக்கப்பட்டு வரும், தோல் பொருட்களின் தரத்தை அதிகரிப்பதற்கான ஒரு திட்டத்தில், தோல் பொருட்களின் தரத்தை அதிகரித்தல் பதப்படுத்தப்படாத தோலை சிறந்த முறையில் பயன்படுத்துதல், தோல் பதனிடுதல் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், தோல் தயாரிப்பு கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தோல் பதனிடுதல், பூர்த்தி செய்தல், காலணிகள் பற்றிய ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பற்றிய தேசிய கழகத்தின் திட்டக் குழு ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த-தோல் பொருட்கள் வளர்ச்சி உற்பத்தி நிலையங்கள், தொழில் நுட்பத் தகவல் நிலையங்கள் ஆகியவற்றை அமைக்க ஆலோசனை கூறியுள்ளது. மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிகளின் பயனாக தற்பொழுது தோல் பொருட்கள் தயாரிப்பும் பூர்த்தி செய்யப்பட்ட தோலின் தர வளர்ச்சியும் முன்னேறி வருகின்றன.



# உழவர்களுக்கு வேளாண்மைத்துறை அளித்த பொங்கல் பரிசுகள்

அ. வேங்கடராமன் ஐ.ஏ.எஸ்.,
வேளாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு

பார் செழிக்கப் பாடுபடும் உழவர் பெருமக்களுக்கு பொங்கல் புதுநாளில் தமிழக வேளாண் துறையின் பணியாளர்கள் சார்பில் முதற்கண் எங்களது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நன்னாளில் வேளாண்மைத் துறையின் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும், வரும் ஆண்டிற்காக நாங்கள் திட்டியுள்ள முக்கிய திட்டங்களையும் மக்கள் மத்தியில் வைக்க விழைகிறேன்.

நெல்லைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்கு உகந்தவை என்று இரண்டு இரகங்களை அறிமுகப்படுத்த உள்ளோம். அவற்றுள் ஒன்று ஐ. ஈ. டி. 1444 (I.E.T 1444). இந்நெல்லின் வயது 115 நாட்கள். 'டி. என். 1' நெல்லையும், கோ. 29 நெல்லையும் சேர்த்து ஒட்டு கட்டியதால் பிறந்தது இந்த இரகம். இந்த இரகம் ஆடுதுறை 31-விட வட ஆர்க்காடு, செங்கை மாவட்டங்களில் அதிக மகசூல் கொடுக்கிறது. இதன் மகசூல் திறன் ஏக்கருக்கு 2830 கிலோ. முன் சம்பா பட்டத்தில் நன்றாகப் பலன் தருகிறது. நெல் சன்ன இரகம்.

மற்றது ஐ. ஈ. டி. 2222 நெல். இந்த இரகம் செங்கை, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு மிகவும் உகந்ததாகத் தெரிகிறது. 105 நாள் வயதுடைய இந்நெல்லும் சன்னமாக உள்ளது. நவரைப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றது. ஏக்கருக்குச் சராசரி 2 டன் மகசூல் திறன் கொண்டது.

நடப்பில் உள்ள டி. 9 உளுந்தைவிட அதிக மகசூல் தரவல்லது பி.எல்.எஸ். 364 என்ற புதிய இரகம். 75 நாட்களில் பலன் தரும். இந்த இரகம் ஏக்கருக்கு சராசரியாக 224 கிலோ மகசூல் தருகிறது. புஞ்சைக்கும், இறவைக்கும் ஏற்றது. எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது. இதைப் போலவே பி.எல். 7 என்ற பச்சைப் பயறும் நல்ல மகசூல் தருகிறது. 65 நாட்களில் ஏக்கருக்கு 245 கிலோ மகசூல் தரும் இந்த இரகம் இறவைப் பயிருக்கு மிகவும் ஏற்றது.

திண்டிவனம் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஏ. எச். 6647 என்ற புதிய நிலக்கடலை இரகத்தை வெளியிட உள்ளோம். இக்கடலையின் வயது 100 நாட்கள். ஏக்கருக்கு சராசரி 430 கிலோ மகசூல் தருகிறது. மானாவாரிப் பயிராகவும் பயிர் செய்யலாம். கடலை வேளாண்மையில் இந்த இரகம் மேலும் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணும் என்று எண்ணுகிறேன்.

இதைப் போலவே எள்ளிலும் ஒரு மிகச் சிறந்த இரகத்தை திண்டிவன நிலையத்திலிருந்து வெளியிடவிருக்கிறோம். எஸ். 1.3240 என்று அழைக்கப்படும் இந்த எள் இரகம் 85 நாள் வயதுடையது. டி. எம். வி. 3 இரகத்தை விட 10 சதம் அதிக மகசூல் தருகிறது. ஏக்கருக்கு சராசரியாக 266 கிலோ மகசூல் தருகிறது. மானாவாரிப் பட்டத்திற்கும் இறவைப் பட்டத்திற்கும் ஏற்றது.



புதிதாக மக்கள் மத்தியில் பரவி வரும் எண்ணெய்வித்து சூரியகாந்தி. கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையம் 115-1 என்ற ஒரு புதிய சூரியகாந்தி இரகத்தைத் தெரிந்தெடுத்துள்ளது. 65 நாளில் மகசூலுக்கு வரும் இந்த சூரியகாந்தி இரகம் ஏக்கருக்கு சராசரி 800 கிலோ மகசூல் தருகிறது. தென் மாவட்டங்களில் அதுவும் குறிப்பாக கரிசல் நிலத்திற்கு இது மிகவும் ஏற்ற இரகமாகத் தெரிகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது சாகுபடியிலுள்ள 'குப்ரி ஜோதி' உருளைக்கிழங்குஇரகத்தை விட அதிக மகசூல் தரவல்லவை SI B1016, SLB885என்றரகங்கள்.

இவை இரண்டு இரகங்களும் இலைக்கருகல் நோயை தாங்க வல்லவை. குப்ரி ஜோதி (Kufri Jothi)யை விட 10 சதம் அதிக மகசூல் தருவதுடன் 25 நாட்களுக்கு முன்பாக அறுவடைக்கு வந்துவிடுகிறது.

இந்தப் புதிய ரகங்கள் அனைத்தையும் பல இடங்களிலும் பரப்பிட இவற்றின் விதைகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இவற்றின் தன்மையை ஆய்ந்த பின், அதிக அளவில் சாகுபடி செய்யும்படி வேளாண் மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.



ஆராய்ச்சி நிலையங்கள் சில புதிய வழிமுறைகளையும் கண்டு பிடித்துள்ளன. அவற்றுள் சில:

1. செண்ட் ஒன்றுக்கு 2.5 கிலோ அளவில் டை அமோனியம் பாஸ்பேட் நெல் நாற்றங்காலுக்கு இட்டால் அதிக மகசூல் கிடைக்கிறது. நாற்று பறிக்கும் பொழுதும் வேர்கள் சேதமடைவதில்லை. நடவு வயலில் இடும் மணிச்சத்து உரத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.

2. நெல் நாற்றங்காலுக்கு 20-வது நாளில் ஒரு தடவை ஒரு ஏக்கருக்கு 600 கிராம் சத்துப்பொருள் என்ற கணக்கில் குருணை வடிவில் உள்ள Carbofuran, Phorate, Ekalux, Cytrolane போன்ற பூச்சி மருந்துகளை இட்டால் நடவு வயலில் முதல் 25 நாட்களுக்கு பூச்சிகள், பயிரைத் தாக்குவதில்லை.

3. நிலக்கடலைப் பயிருக்கு ஏக்கருக்கு 5 கிலோ வீதம் வேளாண்மை இலாக்காவின் 'மைக்ரோ நியூட்ரியண்ட்' அல்லது நுண்பொருள் 2- ஐ போட்டால் சராசரியாக 17 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது. இந்த நுண்பொருள்கலவை எல்லா வேளாண்மைக் கிடங்குகளிலும் கிடைக்க வழிவகை செய்துள்ளோம்.

4. எள் பயிருக்கு ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனிஸ் சல்பேட் இட்டால் 10 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

5. உருளைக்கிழங்குப் பயிருக்கு வேளாண்மைத் துறையின் நுண்பொருள் கலவை 3-ஐ ஏக்கருக்கு 3 கிலோ வீதம் இட்டால் குறைந்தது 15 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

இந்தப் பல்வேறு புதிய வழிமுறைகளையும் உங்கள் கழனிகளில் பரிசோதித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் 8 உழவர் பயிற்சி நிலையங்கள் செயலாற்றி வருகின்றன. வரும் ஆண்டில் புதிதாக மேலும் ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைக்கப்படும். இது தவிர குடுமியான்மலை பண்ணையில், இருக்கும் பணியாளர்களைக் கொண்டு உழவர் பயிற்சி நிலையப் பணிகளை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நிறைவேற்ற உள்ளோம்.

கம்பு வேளாண்மைக்குப் பெரிதும் இடையூறு விளைவிப்பது Green ear நோயாகும். இந்த நோயை எதிர்த்து நின்று நல்ல மகசூல் தரும் சக்தி உள்ள இரகங்களை தெரிந்தெடுத்து கோவில்பட்டியில் புதிய ஆராய்ச்சிப் பிரிவைத் துவக்க உள்ளோம்.

வரலட்சுமி பருத்தி தற்பொழுது அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இதற்கு வேண்டிய விதையை தற்பொழுது பிற மாநிலங்களிலிருந்து பெற்று வருகிறோம். விலையும் அதிகமாக உள்ளது. இந்நிலையைப் போக்க, வரும் ஆண்டில் வேளாண் துறையில் நேரிடைப் பார்வையில் வேளாளர் கழனியில் வரலெட்சுமி விதை உற்பத்தி செய்யப் போகிறோம். இத்திட்டத்தின் பயனாக நிச்சயமாக, குறைந்த விலையில் தரமான விதையாகத் தர இயலும் என்று கூறிக் கொள்கிறேன்.

கோ. 6304 போன்ற புதிய கரும்பு இரகத்திற்கு அதிகத் தேவை உள்ளது. தூரமான இடங்களிலிருந்து விதைக்கரணை பெறுவதில் இடர்ப்பாடுகள் இருப்பதால் பல விவசாயிகள் இப்புதிய இரகங்களை வேளாண்மை செய்ய முடியவில்லை. இதைப் போக்க, தமிழகத்தில் 8 இடங்களில் கரும்பு விதைப் பண்ணைகள் அமைக்கப்படும்.

இதைப் போலவே வாழைக் கன்றுகள். அதுவும் குறிப்பாக Cavendish வாழைக்கன்றுகள் வழங்கிட 200 ஏக்கர் பரப்பில் வாழைக்கன்று பண்ணை அமைக்கவிருக்கிறோம். ஒட்டுத் தென்னைக் கன்றுகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்து ஆண்டுக்கு 20,000 கன்றுகள் வழங்கிட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

நெல், சிறுதானியங்கள், மக்காச்சோளம் இவற்றின் நல்ல விதைகள் தொடர்ந்து கிடைத்திட விதைப்பண்ணைகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, வேளாண் டெப்போக்கள் மூலம் சான்றிதழ் பெற்ற விதைகள் மட்டுமே வழங்கிட ஏற்பாடு செய்து வருகிறோம்.

தமிழகத்தின் வேளாண்மை மறுமலர்ச்சிக்கு அடித்தளம் நீரும் நிலமும். கிடைக்கும் நீரை மேலும் நல்ல முறையில் உபயோகப்படுத்திடவேண்டும். நீரை சீராகப் பயன்படுத்திடும் வழிமுறைகளை மேலும் ஆராய்ந்திடவும், தெரிந்தவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறிடவும், மதுரை மாவட்டத்தில் மேலூரை அடுத்து 1,000 ஏக்கராவில் செயல்விளக்கப் பண்ணை அமைக்க உள்ளோம். தஞ்சை மாவட்டத்தில் 10,000 ஏக்கராவிலும், சாத்தனூர் பாசனப் பகுதியில் 250 ஏக்கராவிலும் செவ்வனே நீர் பாய்ச்சிடும் திட்டங்களைச் செயலாக்க உள்ளோம்.

எப்பொழுதும் செயலாற்றி வரும் மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்துடன், வரும் ஆண்டில் நெல்லை மாவட்டத்தில் காற்று அரிப்புத் தடுப்புத்திட்டத்தையும் 5,000 ஏக்கராவில் செயலாக்குவோம்.

இதைப் போன்ற பல்வேறு திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றிட வேளாண்மைத் துறையில் நிர்வாக அமைப்பையும் மாற்றி வருகிறோம். இப்பொழுது மண்டலங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு Deputy Director of Agriculture செயலாற்றி வருகிறார். எல்லாப் பயிர்களின் மேம்பாட்டுத் திட்டங்களையும் இவர் ஒருங்கிணைத்து அவற்றின் செயல் திட்டத்தைக் கண்காணிப்பார். இதனால் இலாக்காவின் பணித்திறன் மேலும் அதிகரிக்கும் என எண்ணுகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக வரும் ஆண்டிலும் குடியானவர்களின் நலனே எங்களது தலையாயப் பணி என்பதை மனதில் கொண்டு தொடர்ந்து சீரிய முறையில் வேளாண்மை இலாக்கா பணியாற்றும் என்று இந்நாளில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிருபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும், உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.



VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017




MFL-1162



# இதன் விலை ரூபாய் 5830

குறைந்த விலையில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு, சென்னையில் நடைபெற்றதையொட்டி, தமிழ்நாடு பொதுப்பணித் துறையினரால் குறைந்த செலவில் கட்டப்பட்டுள்ள வீட்டில் 2750 × 4000 மில்லி மீட்டர் அளவுள்ள அறையும், 2200 × 2700 மில்லி மீட்டர் அளவுள்ள சமையற் கூடமும், 2950 × 1,200 மில்லி மீட்டர் அளவுள்ள தாழ்வாரமும் உள்ளன. மேலும் தண்ணீர் வசதியோடு கூடிய குளிக்கும் அறை ஒன்றும், கழிவிட அறை ஒன்றும் உள்ளன. அலமாரிகள், நிலையடுக்குகள் ( Shelves ), பரண்கள் ( Loft ) போன்ற தேவையான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளதால் தளப்பரப்பு முழுவதும் வசிப்பதற்குக் கிடைக்கின்றன. இவ்வீடு அமைக்கப்பட்டுள்ள பகுதியின் மண் விரிவடையும் தன்மையுள்ளதாகையால், 'Under-reamed pile foundation' முறையில் இவ்வீடு கட்டப்பட்டுள்ளது.

கடைக்கால் சுவரும், தளமும், சுண்ணாம்பு சுர்க்கி கலவையைப் (1 : 2 : 6) பயன்படுத்தி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன.

தரைக்கு மேல் உள்ள சுவர் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. சுவர் எழுப்ப, சுண்ணாம்பு, சுர்க்கி, மணல் கலந்தகலவையே பயன்படுத்தப்பட்டுள்ளது. உள் பகுதி சுவர்களுக்கு 1:2:8 என்ற கலவையும், வெளிப்பகுதி சுவர்களுக்கு 1:2:6 என்ற கலவையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கதவுகளுக்கும், பலகணிகளுக்கும், இரண்டாந்தர நாட்டு மரங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன. மரச்சட்டங்களுக்குப் பதிலாகச் செங்கல் தூண்களே (Brick piers) பயன்படுத்தப்பட்டுள்ளன.

வாயில், பலகணி ஆகியவற்றின் பகுதிகளுக்கு முன்பே செய்த 40 மில்லிமீட்டர் கனத்தில் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் காங்கிரீட் (1:2:4) பலகைகளே பயன் படுத்தப்பட்டுள்ளன.

நாட்டுச் செங்கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட, வலிவூட்டப் பெற்ற சிமெண்ட் கான்கிரீட் பலகைகளைக் கொண்டு, சாய்வான கூரை அமைக்கப்பட்டுள்ளது.

### வீடற்றோர்க்கு வீட்டு மனை

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில், 1,56,526 வீட்டு மனைப் பட்டாக்கள் நிலமற்ற கிராமப்புற மக்கள் மற்றும் நலிந்த பிரிவினர்க்கு ஒப்படை செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்தநாளையொட்டி, 1976, நவம்பர்19-ஆம் நாள், 59,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக, 1,22,306 பட்டாக்கள் அந்த நாளில் வழங்கப் பட்டுள்ளன.

சுண்ணாம்புக் கலவையுடன் செங்கல் ஜல்லிகளைச் சேர்த்து (16:32:100) 10 சென்டிமீட்டர் கனத்திற்கு வீட்டின் தளம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேல் 12 மில்லி மீட்டர் கனத்திற்குச் சிமெண்ட் கலவைச் சாந்து (1:5) பூசப்பட்டுள்ளது.

சுவரின் : வெளிப்புறம் சுண்ணாம்புக் கலவையால் (1:2:4 ) 12.5 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு, 2 தடவை சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. சுவற்றின் உட்புறம் சுண்ணாம்பு, சுர்க்கி கலவையால் (1:2:6) 12 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு 2 தடவை சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது.

கூரையின் மேற்பகுதி சுண்ணாம்பு, சுர்க்கி, கலவையால் (1:2:6) 12 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு, சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. அடிப் பூச்சுப் பொருளைக் கொண்டு ஒரு தடவை பூசப்பட்ட பின், கடையில் விற்கும் தயார் நிலைப் பெயிண்ட் 2 தடவை பூசப்பட்டுள்ளது.

குளிக்கும் அறை, கழிப்பறை ஆகியவற்றில் 'பி.வி.சி' குழாயும் பித்தளை நீர்வடி சாதனமும் அமைக்கப்பட்டுள்ளன. கழிப்பறை இந்திய முறையிலே அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டின் இதர சிறப்பு அம்சங்களாவன.

(1) நகர்ப்புறத்திற்கும், புற நகர்ப் பகுதிக்கும் ஏற்றது.

(2) இந்திய தட்ப வெப்ப நிலைக்கும், பனிக்கட்டி விழும் பகுதியற்ற மற்ற சாதாரண நிலப்பாகுபாடு உள்ள மண் நிலைமைக்கும் ஏற்றது.

(3) கட்டட தரை மட்டப் பரப்பு—23.85 சதுர மீட்டர்.

(4) தளப் பரப்பு : 19.46 சதுர மீட்டர்.

வீடு கட்டும்போது வழக்கமாகப் பின்பற்றப்படும் முறைகளில் இருந்து பின்கண்ட வகைகளில் புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன.

(1) நாட்டுச் செங்கற்களைப் பயன்படுத்தி நிரப்பப் பெற்ற, வலிவூட்டப் பெற்ற சிமெண்ட் கான்கிரீட் பலகைகளைக்கொண்டு கூரை அமைக்கப்பட்டுள்ளது.

(2) மாதிரி விதித் தொகுப்புகளுக்கு ஏற்றது.

**நன்மைகள் :**

மேற்கூறிய வகையில் வீடு கட்டினால் பின்கண்ட பயன்கள் ஏற்படுகின்றன.

(1) இம்மாதிரி கூரை அமைப்புக்கு நடைமுறையில் உள்ள வலுவூட்டப்பெற்ற சிமெண்ட் கான்கிரீட் கூரை அமைப்புமுறைக்குத் தேவைப்படுவதை விட குறைந்த அளவு எஃகும் சிமெண்டுமே தேவைப்படுகின்றது.

(2) இரண்டாந்தர வகை நாட்டு மரங்களே கதவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை.

(3) சிமெண்ட் உபயோகிப்பதனால் ஏற்படும் செலவைக் குறைப்பதற்காக உள்ளூரில் கிடைக்கும் செங்கல் ஜல்லி, சுர்க்கி, சுண்ணும்பு ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

(4) கட்டட தரைமட்டப் பரப்பில் குறைந்த நீளச் சுவர்களே போதுமானது.

(5) சமையல் அறையைத் தூங்கும் அறையாகவும் பயன்படுத்தலாம்.

தமிழ்நாடு பொதுப்பணித் துறை கட்டியுள்ள வீட்டின் விலை ரூபாய் 5,830. இவ்வீட்டிற்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளது.

மேற்கூறிய வகையில் தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுள்ள மலிவு விலை வீடு ஏழை எளியவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் ஏற்றதாகும்.

## இவ்வீட்டின் பொருளியல் (ECONOMICS)

| | | ச. மீட்டருக்கு |
|---|---|---|
| (1) கட்டட தரைமட்டப் பரப்பின் செலவு மதிப்பீடு | ... | ரூ. 244.44 |
| (2) ஒரு சதுர மீட்டர் கட்டடத் தரைமட்டப் பரப்பிற்குக் கூரை அமைப்பதற்கான செலவு | | ரூ. 54.60 |
| (3) சுவர் அமைப்பதற்கான செலவு | | ரூ. 16.51 |
| (4) இவ்வீடு உபயோகப்படக்கூடும் என்று எதிர் பார்க்கப்படும் காலம் | | 60 ஆண்டுகள் |

(5) ஒரு சதுர மீட்டர் கட்டடத் தரைமட்டப் பரப்புக்குத் தேவைப்படும் பொருள்கள்:—

| | | சிமெண்ட் (ச. மீட்டருக்குக் கிலோவில்) | எஃகு (ச. மீட்டருக்குக் கிலோவில்) |
|---|---|---|---|
| (1) கடைக்கால் | ... | 22.00 | 5.57 |
| (2) சுவர்கள் | ... | ... | ... |
| (3) கூரை | ... | 26.03 | 4.00 |
| (4) வலுவூட்டப் பெற்ற சிமெண்ட் விட்டம் | ... | 0.76 | 0.07 |
| (5) தளம் (பூசுவதற்கு) | ... | 3,62 | ... |
| மொத்தம் | .... | 52.41 | 9.64 |

| பல்வேறு பணிகளுக்கு ஆகும் செலவு | ரூ. பை. |
|---|---|
| (1) வீட்டின் உட்புறத்தில் தண்ணீர் வசதிக்காக... | 25.00 |
| (2) உட்புற சுகாதார வசதிக்காக ... | 140.00 |
| (3) வீட்டினுள் மின்சார வசதி செய்வதற்காக | 450.00 |
| (4) வீட்டின் வெளிப்புறத்தில் தண்ணீர் வசதிக்காக | 120.00 |
| (5) வெளிப்புற சுகாதார வசதிக்காக ... | 102.00 |

## சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு !

தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த மாவட்டத்தில் சிறந்த ஒன்றியத்திற்கான (1975—76) சுழற்கேடயம் பெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது:

1. மணிகண்டம் (திருச்சி)
2. தஞ்சாவூர் (தஞ்சை)
3. அச்சரப்பாக்கம் (செங்கை)
4. வேம்பாக்கம் (வ. ஆ)
5. நெல்லிக்குப்பம் (தெ. ஆ)
6. காடயம்பட்டி (சேலம்)
7. பவானிசாகர் (கோவை)
8. அறந்தாங்கி (புதுக்கோட்டை)
9. பெரியகுளம் (மதுரை)
10. ஸ்ரீவில்லிபுத்தூர் (இராமநாதபுரம்)
11. தூத்துக்குடி (நெல்லை)
12. ஊத்தங்கரை (தர்மபுரி)
13. கிள்ளியூர் (குமரி)
14. கோத்தகிரி (நீலகிரி)

# ஆளுநரின் மூன்றாவது ஆலோசகர்



திரு. வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்.,

தமிழ்நாடு ஆளுநரின் மூன்றாவது ஆலோசகராகத் தமிழ்நாடு அரசு தலைமைச்செயலாளர் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் தாம்பரத்தை அடுத்த பொன்மார் என்னும் கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் 1924 அக்டோபர் 7-ந் தேதி பிறந்தார், தந்தை பெயர் வேதகிரி. அவர் கிராம முன்சீப்பாக வேலை பார்த்தார்.

இவர் முதலில் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., (ஆனர்ஸ்) தேறினார். 1948 மார்ச் 30-ந்தேதி ஐ.ஏ.எஸ்; அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நெல்லூர், கூடூர், விசாகப்பட்டினம், அருப்புக்கோட்டை, சிவகங்கை ஆகிய பகுதிகளில் 1954-ஆம் ஆண்டு வரை சப்-கலெக்டராகப் பணியாற்றினார். 1956-ல் தஞ்சைமாவட்டஆட்சித் தலைவராகப் பொறுப்பு ஏற்றார், சென்னையிலும், டில்லியிலும் துணைச் செயலாளராகவும் பல துறைகளில் பணியாற்றினார். 1965லிருந்து 1967 வரை, தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகப் பணியாற்றினார். அத்துறையின் முதல் இயக்குநர் இவரே.

1976 ஜனவரி மாதம் 31-ந் தேதி தமிழக அரசின் 2-வது செயலாளராகவும், அதே ஆண்டு மார்ச் மாதம் 11-ந் தேதி அன்று தலைமைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

16-2-77 அன்று ஆளுநரின் ஆலோசகராகப் பதவி ஏற்றார்.

# புதிய தலைமைச்செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர், ஐ. ஏ. எஸ்.,

கடந்த 1976-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசின் 2-வது செயலாளராகப் பதவியில் இருந்து வந்த திரு. சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்படடுள்ளார்.


திரு. சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 1926-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி பிறந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து, பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். 1950-ஆம் ஆண்டு இவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1950 முதல் 1952 வரை திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் உதவி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு வருவாய்த் துறையில் முக்கியப் பொறுப்புகளில் இருந்தார். பின்னர் 1956-ல் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1958 முதல் 1964 வரை மத்திய அரசு நிதி அமைச்சகத்தில் துணைச் செயலாளராகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்திலுள்ள இந்தியத் தூதரகத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றினார்.

பிறகு சீரமைப்பு, வளர்ச்சி சர்வதேச வங்கியில் 8 ஆண்டுகள் பணி புரிந்தார். தமிழக அரசு பொதுத் துறையில் பின்னர் கூடுதல் தனிச் செயலாளராக 1 ஆண்டு பதவியில் இருந்தார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

16-2-77 அன்று தலைமைச் செயலாளராகப் பதவி ஏற்றார்.



# ஆளுநர் ஆலோசகர்கள் பொறுப்பேற்கும் துறைகள்

தமிழ்நாட்டில் ஆளுநர் அவர்களுக்கு ஏற்கெனவே ஆலோசகர்களாக இருந்து வரும் திரு பி. கே. தவே, திரு ஆர். வி. சுப்பிரமணியன் ஆகிய இருவருடன், தற்போது மூன்றாவது ஆலோசகராக திரு வி. கார்த்திகேயன் அவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். மூன்று ஆலோசகர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் பின் வருமாறு :

## திரு பி. கே. தவே

1 பொது நிர்வாகம் (சட்டம், ஒழுங்கு, அரசியல், அரசியல் பென்சன், வெளிநாட்டினர்)

2. நிதித்துறை (நிதி, திட்டம்)

3. விவசாயம் (உணவு உற்பத்தி விவசாயச் சீர் திருத்தம், வெள்ள நிவாரணம், பால்வள நிறுவனம்)

4. காடு, மீன் வளம்

5. சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு

6. வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம்

7. வர்த்தக வரி, இந்து அறநிலைய இலாகா (வர்த்தக வரி, பத்திரப் பதிவு, சீட்டுகள் பற்றிய சட்டம்)

8. மதுவிலக்கு

## திரு ஆர். வி. சுப்பிரமணியன்

1. கல்வி, தொழில் நுட்பக் கல்வி

2. சமூக நலம் (அரிஜன நலம், அனாதை இல்லங்கள்)

3. தொழில் துறை (காதி, கிராம கைத் தொழில், கைத்தறி, சுரங்கம், இரும்பு, உலோகக் கட்டுப்பாடு)

4. பொதுப்பணித் துறை (சிறிய நீர்ப் பாசனங்கள், நெடுஞ்சாலைகள்)

5. தொழிலாளர், வேலை வாய்ப்பு

6. கூட்டுறவு

7. வர்த்தக வரி, இந்து அறநிலையங்கள் (இந்து அறநிலைய நிதி, வக்ப் போர்டு)

8. பொது நிர்வாகம் (சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி வாரியம்)

## திரு வி. கார்த்திகேயன்

1. பொதுத்துறை (பொது நிர்வாகம், ஐகோர்ட்டு, மாவட்ட நீதிபதிகள், ஐ.சி.எஸ்., ஐ. ஏ. எஸ்., மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் பற்றிய விஷயங்கள், தேர்தல், ஆட்சி மொழி, பழைய இராணுவத்தினர்)

2. ஊழியர்கள் நிர்வாக சீர்திருத்தத்துறை

3. உள்ளாட்சித் துறை (போலீஸ், கோர்ட்டுகள், சிறைச்சாலை, இடவசதிக் கட்டுப்பாடு, மோட்டார் வாகனங்கள், சினிமா சட்டம், அகதிகள் நலம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பாஸ்போர்ட்டு, செய்தித் துறை, மக்கள் தொடர்பு)


4. வருவாய்த் துறை (ரெவின்யூ போர்டு, உதவி கலெக்டர்கள், நிலச்சீர்திருத்தம்)

5. சட்டத் துறை.

6. கிராம அபிவிருத்தி, நகரசபை நிர்வாகம் (பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், நகர சபைகள், மாநகராட்சிகள், குடிநீர் வாரியம், பூமிதானம்)

7. போக்குவரத்துத்துறை (போக்குவரத்து, அரசு அச்சகம், எழுது பொருள் துறை, துறைமுகங்கள்.)

8. சட்டசபை.



திரு. கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு அரசின் 2-வது செயலாளர்





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!













| | பெரியவர் கூலி<br>ரூ.பை. | சிறியவர் கூலி<br>ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெருத பிற பணிகளுக்கு | 3.50 | |

வேலை நேரம் : உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.